# புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

Puthiya samadharam




இருளுக்குள் நெப்போலியன்களும், கிற்லர்களும் செயற்படுகின்றனர்

26 FEB 2010 PERIODICALS DIVISION

இதழ் 89 | டிசம்பர் 2009 | விலை ரூபா 20/=

# மூன்றாவது அணியை உருவாக்குவோம்

**நடைபெற இருக்கின்ற ஜனாதிபதி தேர்தல் உட்பட பொதுத்தேர்தலிலும் இரண்டு அணிகளே முனைப்பு காட்டுகின்றன. குறிப்பாக நடைபெற இருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் ஆட்சியில் இருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பில் மகிந்த ராஜபக்ஸவும், அடுத்த அணியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான அணியின் சார்பில் முன்னைநாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவும் போட்டியிட உள்ளனர்.**

மேற்படி இருவருமே தமிழ் மக்கள் மீது நிகழ்ந்த பாரிய இனப் பேரழிவுக்கு பொறுப்பானவர்களாவர். இத்தகைய சூழ்நிலையில் இவர்கள் இருவரில் எவரையும் ஆதரிக்க முடியாத நிலையே தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. எனவே வருகின்ற ஜனாதிபதி தேர்தலை பகிஸ்கரிக்க வேண்டும் என்ற கருத்தும் காணப்படுகிறது.

1948ன் பின்னர் கடந்த 61 வருடங்கலப் பகுதியை ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தமதாக்கி ஆட்சியை செலுத்தி வந்தனர்.இவ்விரண்டு கட்சிகளின் ஆட்சியின் விளைவாக இந்த நாட்டின் தமிழ் பேசும்மகக்ள் எல்லாவிதமான உரிமைகளையும் இழந்து இறுதியில் தாம்வாழும் பூமியை விட்டு அகதிகளாக வாழும் நிலை உருவானது. பின்னைய காலகட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இனவாத சக்திகளுடன் சங்கமித்து செயற்பட, ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்கள் சார்பாக செயற்படும் நிலைக்கு தன்னை மாற்றியது. இதனால் சமஸ்டி முறையை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கவும் முன்வந்தது. ஆனாலும் யுத்தம் முனைப்பு பெற்றபோது ஐக்கிய தேசிய கட்சி யுத்தத்திற்கு ஆதரவாக செயற்பட தொடங்கியது. யுத்த வெற்றியினை ஜனாதிபதி கொண்டாடிய போது அதில் கலந்துகொண்டு யுத்த வெற்றி மகிழ்வில் ஐக்கிய தேசிய கட்சியும் தன்னை இணைத்துக் கொண்டது.

இதன் பின்னர் ஐக்கிய தேசிய கட்சி சமஸ்டி முறையை கைவிட்டது. ஜே.வி.பியுடன் உறவுக்கு போயுள்ளது. ஒற்றை ஆட்சி முறையை மாற்ற முடியாது என கூறுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் ஐக்கிய தேசிய கட்சி பேரினவாதிகளின் குரலுக்கு அடிபணிந்த கட்சியாக செயற்படுகின்றது. எனவே இன்று ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட கட்சிகளின் சார்பில் சரத் பொன்சேகா போட்டியிடப்போகிறார்.


தமிழ் மக்கள் இத் தேர்தலை பகிஸ்கரிப்பது பேரினவாதத்திற்கு செய்யும் உதவியாகவே முடியும். மேலும் தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் தென் இலங்கை மக்களுக்குள் செல்வாக்கை செலுத்தவும் முடியாத நிலை தொடரவே வழிவகுக்கும். எனவே தமிழ் மக்கள் தமது விடுதலை போராட்டத்தை வென்று எடுப்பதற்கு உதவக்கூடிய தென் இலங்கை அணி ஒன்றின் உருவாக்கத்திற்காக செயற்பட வேண்டும்.

இன்று தென் இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை, தமிழ் மக்களின் தாயகத்தை ஏற்கின்ற பல அரசியல் சக்திகள், அணிகள் உள்ளன இவற்றின் ஐக்கிய பட்ட செயற்பாடுகள் அண்மைய காலங்களில் நம்பிக்கை தரும் தன்மையாக மாறிவருகிறது. இத்தகைய சூழ்நிலையில் அங்கனம் உருவாகி முன்வருகின்ற அணிக்கு தமிழ் தலைமைகள் தமது ஆதரவை வழங்குவதுடன் தம்மையும் இணைந்துக் கொள்ள வேண்டும்.

தேர்தலில் வெற்றி பெறக் கூடியவருக்கே வாக்களிக்க வேண்டும். என்ற நிலையை நாம் மாற்ற வேண்டும். இவ்வளவு காலமும் வெற்றி ஈட்டியவர்கள் எமக்கு செய்ததெல்லாம் துரோகமே எடுத்த எடுப்பில் மாபெரும் வெற்றியை எட்டக்கூடிய நிலைக்கு மூன்றாவது அணி செல்ல முடியாது. அப்படி செல்லும் என்று கூறுவது கற்பனையானதாகும். இன்று தமிழ் மக்களின் முஸ்லீம் மக்களின் மலையக மக்களின் பிரச்சினையுடன் தென் இலங்கை தொழிலாளர்களின் பிரச்சினைகளும் முக்கியமான பிரச்சினையாக உள்ளன. இவற்றை ஒன்று படுத்தி ஒரு அணியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இதன் மூலமே சகலரும் விடுதலை பெற வாய்ப்பு ஏற்படும்.

மகிந்த ராஜபக்ஸ அவர்கள் பேரினவாதிகளின் செயற்பாட்டுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். இவர் கொடுத்தது போதாது, அதைவிடமேலும் வேண்டும் என்றால் சரத் பொன்சேக்காவை ஆதரிக்க வேண்டும். என்ற நிலையே பேரினவாதிகளிடம் காணப்படுகிறது. தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் தொடர்பாக பெரும் தேசிய கட்சிகளின் அணியில் எத்தகைய சாதகமான நிலைப்பாடுகளும் இல்லை. எனவே இக் கட்சிகளின் இரண்டு வேட்பாளர்களையும் தமிழ் மக்கள் ஒரு போதும் ஆதரிக்க முடியாது.

தமிழ் தலைமைகள் உடனடியாக தென் இலங்கையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழ் மக்களின் தாயகம் என்பவற்றை ஏற்றுக் கொள்கின்ற சக்திகளுடன் ஒரு இணக்கத்திற்கு வந்து ஒரு அணியை உருவாக்கி அந்த அணியின் சார்பாக ஒரு ஜனாதிபதி வேட்பாளரை களத்தில் நிறுத்த வேண்டும். இது ஒரு வரலாற்று தேவையாகும்.



அரசாங்க தொழிலாளர்களின் வேதனத்தை உயர்த்துமாறு அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம் 18-11-2009 அன்று கோட்டை புகையிரதநிலையத்திற்கு முன்பாக நடத்திய மறியல் போராட்டம.

## சடலத்தை கொண்டுவர வக்கற்ற மலையக தலைவர்கள்



வறுமையை விரட்ட தனது சகோதரர்களின் கல்வியை மேம்படுத்த சவுதி அரேபியா சென்ற மலையக பெண் அங்கே மரணித்துள்ளார். மஞ்சுளா என்ற பெயரை கொண்ட 26 வயதுடைய இப்பெண்ணின் சடலத்தை சொந்த ஊரான மடுல்கலைக்கு கொண்டுவருவதற்கு எந்த தலைவரும் முன்வரவில்லை. இறந்த பெண்ணின் உறவினர்கள் மலையக தலைவர்களை பலமுறை அணுகியும் அவர்களுக்கு எவரும் உதவ முன்வரவில்லை.

இதே நேரம் இந்த விடயத்தை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு கொண்டுவரப்பட்டு அவர்களின் செயற்பாட்டினால் மேற்படி பெண்ணின் சடலம் இலங்கைக்கு கொண்டு வருவதற்குரிய பணிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் செய்து

........ 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம்

சமில் ஜயநெத்தி

இன்று இலங்கையில் உள்ள சிறைக்கூடங்களில் 10,000 மேற்பட்ட அரசியல் கைதிகள் உள்ளனர். இவர்களின் 95 வீதமானவர்கள் தமிழ் அரசியல் கைதிகள் ஆவர். ஏனைய 5 வீதத்தில் சிங்கள, முஸ்லீம் கைதிகள் உள்ளனர். 1989 ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்த கைதிகள் சிறையில் வாடுகின்றனர். 15 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகின்ற பலரை நாம் இனம் கண்டுள்ளோம். இவர்கள் மீதான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாத நிலையில் இவர்கள் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் கூறுகிறது விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டார்கள் என. எனவே இவ்வளவு தொகையான கைதிகளை ஏன் சிறையில் வைத்திருக்க வேண்டும் 1971- 1989 காலப்பகுதியில் தென் இலங்கையில் ஏற்பட்ட கிளர்ச்சிகளின் போது 1971ல் 22000 அரசியல் கைதிகளும் 1989ல் 40.000 அரசியல் கைதிகளும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர் எனவே இன்று சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இதே நேரம் தென் இலங்கையில் தொழிற்சங்க வெகுஜன செயற்பாட்டில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள், சிங்கள புலிகள் என குற்றம் சாட்டப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். 2007 பெப்ரவரி மாதம் 3ம் திகதியல் இருந்து இது நடைபெற தொடங்கியது. முதலில் மூன்று இளைஞர்களை சிங்கள புலிகள் எனக் கூறி கடத்திச் சென்றனர். அன்றில் இருந்து நாம் இந்த இளைஞர்கள் விடுதலைக்காக அயராது செயற்பட்டோம். மொத்தமாக தென் இலங்கையில் 25 சிங்கள் இளைஞர்கள் இங்கனம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் அடிப்படை மனித உரிமைமீறல் என்ற அடிப்படையில் வழக்கை தொடர்ந்து 12 பேர்வரை விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த 25 சிங்கள இளைஞர்கள் கைது செய்யப்பட்ட காலப்பகுதியில் இவர்களது குடும்பத்தினருக்கு பேரினவாதிகளால் பெரியளவில் அச்சுறுத்தல் விடப்பட்டனஅவர்களது குடும்பத்தினர் வீடுகளில் வாழமுடியாத நிலை உருவாக்கப்பட்டது.வருமானம் இன்றி போதிய உணவுவசதிகள் இன்றி குறிப்பாக குழந்தைகள் போசாக்கின்மையால் கஷ்டப்பட்டனர். நாம் இந்த நிலையை போக்க எம்மால் செய்யக்கூடிய உதவிகளை செய்து அவர்களது கஸ்டங்களை குறைக்க முனைந்தோம்.

தற்போது சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் மட்டக்களப்பை சேர்ந்த மகேந்திரன் புவிதரன் விடயத்தில் நாம் கூடுதல் அக்கறை காட்டி வருகின்றோம் இந்த இளைஞன் 1995ல் கைது செய்யப்பட்டுள்ளார். இனறு வரை இவர் மீது எத்தகைய நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் 14 வருடங்களாக சிறையில் உள்ளனர் இந்த இளைஞன் கைது செய்யப்படும் வேளையில் அவனுக்கு 14 வயது தற்போது இந்த இளைஞனுக்கு 28 வயதாகிறது. இதே போன்று சிறையில் அனேகம் பேர் உள்ளனர்.

சிறையில் வாடும் அரசியல் கைதிகளுக்காக நாம் பொது அமைப்பை உருவாக்கி உள்ளோம்.இந்த அமைப்பின் முதலாவது கூட்டம் கடந்த 18-11-09ல் மருதானை சமூக சமய நிலையத்தில் நடைபெற்றது இக் கூட்டத்திற்கு நாட்டின் பலபகுதிகளிலும் இருந்து அரசியல் சிறைக்கைதிகளின் உறவினர்கள் வருகைதந்திருந்தனர். சமய பெரியார்கள், வெகுஜன செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள், சட்ட ஆலோசகர்கள். சர்வதேச பிரதிநிதிகள் பிரசன்னத்தின் கீழ் இந்த கூட்டம் நடைபெற்றது எதிர்காலத்தில் சிறைகளில் இருக்கும் 10,000 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அழுத்தத்தை கொடுப்பதற்கான போராட்டவடிவங்கள் இங்கே ஆராயப்பட்டன. சட்ட ரீதியான அணுகு முறைகள் போராட்ட வடிவங்கள் குறித்து பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டது. இன்றுள்ள நவீன உலகில் தனித்து இருக்க முடியாத நிலை காணப்படுகிறது. அவ்வளவு தூரம் நாகரீகம் வளர்ச்சி கண்டுள்ளது. ஆனால் எமது நாட்டின் சிறைகளில் 15 வருடங்களுக்கு மேலாக எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் ஆயிரக்கணக்கான தமிழ் இளஞர்கள் துன்பப்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது






மரசியல் சிறைக் கைதிகளின் உறவினர்கள் மத்தியில் கலாநிதி விக்ரமபாகு உரையாற்றுகிறார்.

# தாயின் கருவறையிலே வறுமைமையில் வளரும் குழந்தைகள்

ப.வர்ணம்

மலையக தமிழ் மக்கள் பல்வேறு வகையில் முன்னேற்றப் பாதையில் செல்வதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினரும் பிரதி நீதி மறுசீர் அமைப்பு அமைச்சர் புத்திரசிகாமணியும் மற்றும் பிரதி சுகாதார அமைச்சர் சுரேஸ் வடிவேல் ஆகியோர் பெருமை கொள்கின்ற போதிலும் அம்மக்களின் வாழ்க்கைத் தரம் தேசிய தரத்தோடு ஒப்பிடும் போது வறுமைக்கோட்டிற்கு கீழ் நிலையிலே உள்ளது. இன்று வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு ஏற்ப அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள் ரூபா 5000 சம்பள உயர்வு கேட்டு போராட்டம் நடத்துகின்ற வேளையில் மலையக பெருந் தோட்ட தொழிலாளர்கள் மிக குறைவான நாளாந்த சம்பளமாக ரூபா 500 மட்டுமே கேட்கின்றனர். அதைக் கூட பெற்று கொடுக்க முடியாத தலைவர்கள் மலையக மக்களின் வாக்குகளை பெற்று அமைச்சர்களாக பிரதிநிதித்துவம் பெற்று, இனப் படுகொலை அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதோடு மலையக மக்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்க வக்கில்லாதவர்களாக இருக்கின்றனர்.

மலையக சிறு தோட்ட தேயிலை உற்பத்தியாளர்களிடம் இருந்து ஒரு கிலோ கொழுந்தை தனியார் துறையினர் ரூபா 58முதல் ரூபா 65 வரைக்கும் வாங்கும் அதேவேலையில் ஏன் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளம் ரூபா500 கொடுக்கமுடியாது?. என்பதே மலையக தொழிலாளர்களின் ஆதங்கமாகும். மத்தியமாகாண கல்வி அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் பாடசாலை கட்டிடங்களையும், ஆசிரியர்களையும், பௌதீக வளங்களையும் வாரிவழங்குவதாக கூறுகிறார். ஆனால் மலையக பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் கற்ப்பிக்க ஆசிரியர்கள் பற்றாகுறையாக இருப்பதாக கல்வி அதிகாரிகள் கூறுகின்றனர். இ.தொ.கா.உப தலைவர் முத்து சிவங்களிங்கம் கூறுகிறார் மலையகத்தில் சித்தியடைந்த மாணவர்கள் இல்லாத போது எவ்வாறு அரசதுறையில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் என.

மலையக குழந்தைகள் தாயின் கருவறையில் இருக்கும் போதே வறுமையில் வாடுகின்றார்கள். இந்த நிலையில் எவ்வாறு கல்வியில் வளர்ச்சி அடையமுடியும். எனவே பிற்போக்கு வாத மலையக தலைமைத்துவத்தை நிராகரித்து தங்களின் ஜனநாயக மனித உரிமை பொருளாதாரம் போன்ற சகல உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்காக தென் இலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடுவதன் மூலமே மலையக மக்கள் வெற்றி பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாதிபதி தேர்தலும் பிரதான அரசியல் கட்சிகளின் வங்குரோத்து நிலையும்.



வ.திருநாவுக்கரசு

இன்னும் ஆறுமாதகாலத்தினுள் அதாவது 2010ஏப்பிரல் மாதம் பாராளுமன்ற தேர்தல் இடம் பெற வேண்டும். அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் நவம்பர்மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அரசாங்கம் வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிக்கக் கூடியநிலையில் இல்லை. எனவே நான்கு மாதங்களுக்கான கணக்கு வாக்கொடுப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் சர்வதேச நாணய நிதியம் 2.6 பில்லியனை கடனாக வழங்கியபோது வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும்தொகை 5 தொடக்கம் 7 வீதம் வரையே அமையவேண்டும் எனவும் அதற்கு மேலாக அமையக்கூடாது எனவும் நிபந்தனை விதித்திருந்தனர். இந்த சிக்கல் நிலையினாலேயே இம்முறை வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படுவது கைவிடப்பட்டுள்ளது.மீண்டும் சர்வதேச நாணய நிதியம் 329 பில்லியன் ரூபாவை கடனாக வழங்குவதடன் அந்நிய செலவானி கட்டுப்பாடுகளை தளர்த்தவேண்டும் எனவும் நிபந்தனை வித்தித்துள்ளது. நாங்கள் சர்வதேச நாணயநிதியங்கள் போன்ற அமைப்புக்களுக்கு அடிபணியமாட்டோம் என மார்தட்டிய ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் சர்வதேசத்திடம் மண்டியிடுகிறது.

**வரவிருக்கும் ஜனாபதித் தேர்தல்**

இன்றைய சூழிநிலையில் ஜனாதிபதி தேர்தலையோ, பொதுத் தேர்தலையோ சந்திப்பதற்கு அரசாங்கம் கலக்கமடைந்த நிலையிலேயே காணப்படுகிறது மேலும் ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட எதிரணியினரின் பொது வேட்பாளராக ஒருவரை தேர்தலில் களமிறக்கலாம் என்ற நிலை உருவாகியுள்ளதால் பிரதான அணியினரிடையே உள்ளக போர் ஒன்று ஆரம்பித்த நிலை காணப்படுகிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த முடிவடைந்த நிலையில் மேற்படி யுத்தத்தின் வெற்றியின் கதாநாயகர்கள் யார் என்பதிலேயே பிரச்சினைகள் விசுவரூபம் எடுத்தன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர் சகோதரர் கோதபாய ராஜபக்ஸ ஆகியோரே முதல் நிலைப் பட்டதுடன், சரத்பொன்சேகா ஓரம் கட்டும் போக்கு நேர்த்தியாக மேற் கொள்ளப்பட்டதால் சரத்பொன்சேக்காவின் வெளியேற்றம் தவிர்க்க முடியாததாகியது. சரத் பொன்சேகா அரசியல் நாட்டம் அற்றவர் என கூறிவிட முடியாது. எனவே தான் இவரை ஓரம் கட்டும் நடவடிக்கைகளை மகிந்த ராஜபக்ஸ எச்சரிக்கையுடன் மேற்கொண்டிருந்தார். மதலில் அவரை விளையாட்டு துறை அமைச்சின் செயலாளராக்கி அவரின் மக்கியத்துவத்தை குறைக்கும் நிலையை உருவாக்கப்பட்டது சரத் பொன்செகா சிங்கள் பௌத்த தேசிய வாதத்தின் குரலை பிரதிபலிப்பவராகவே செயற்பட்டு வந்தார்.அவரு ஒரு செய்தியில் இந்த நாடு சிங்களவருக்கு உரிய நாடு என்று கூறியிருந்தார். மேலும் 13வது அரசியலமைப்புக்கு மேலாக அதிகாரபரவலாக்கம் மேற்கொள்ளப்படுமானால் முதல் நிறுத்த செயற்பட வேண்டும் எனவும் சூழி உரைத்தார்.

**இராணுவ சதி புரட்சி இடம் பெற்றதேயில்லை.**

1962ம் முண்டில் ஆயுதபடைகளின் ஒரு பிரிவினர் அன்றைய ஆட்சியை கவிழ்ப்பதற்குரிய சதி முயற்சிகளில் ஈடுபட்டனர். அது உடனடியாகவே முறியடிக்கப்பட்டது. பின்னர் அத்தகைய முயற்சிகள் எதுவும் இந்தநாட்டில் நிகழ வில்லை. ஆனால் அண்மைக் காளங்களில் இராணுவத்தினரை முதன்படுத்தும் போக்கை பிரதான கட்சிகள் முன்நிலை படுத்தி வந்துள்ளன. தற்போது நிலை உச்ச நிலைக்கு சென்றுள்ளது. பிரதான எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் குறிப்பாக முஸ்லீம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் ஜெனரல் பொன்சேகாவை ஜனாதிபதி வேட்பாளராக்குவதில் கண்ணும் கருத்துமாக செயலாற்றுகின்றனர். இது இக்கட்சிகளின் வங்குரோத்து தனத்தையே பறைசாற்றுகிறது.

**ஜே.வி.பியின் குத்தக்கரணம்.**

ஜே.வி. பியினரின் அரசியல் பயணம் கோமாளிகளின் பயணமாக காணப்படுகிறது. இவர்கள் பேரினவாதிகளாக காட்டிக் கொண்டதுடன் தம்மை ஏகாதிபத்திய எதிராளர்களாக அடையாளப்படுத்தி வந்தனர். தாம் ஐக்கிய தேசிய கட்சியுடன் எந்த நிலையிலும் இணக்கத்துக்கு போகமாட்டோம் என கடந்த வாரம் கூட பேட்டியளித்து இருந்தனர். இன்று சரத் பொன்சேக்காவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க அவர்களும் ஐக்கிய தேசிய கட்சிக்கு பச்சை கோடி காட்டியுள்ளனர்.ஜே.வி. பியின் போராட்ட வரலாற்றில் 1971ல் 10,000மேற்பட்ட இளைஞர்கள் தமது

6

# தமிழ் தேசிய கூட்டமைப்பு பாதை தடுமாறுகின்றதா?.

ஜனா

தமிழ்மக்களின் போராட்டம் பாரிய பின்னடைவை சந்திப்பதற்கு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்களிப்பும் பெரியளவில் உதவியுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சர்வதேச மட்டத்தில் இப் போராட்டத்தைஉரிய வழியில் முன்னெடுத்து செல்லவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும் மேலும் தென் இலங்கையில் இப் போராட்டத்திற்கான ஆதரவு தளத்தை உருவாக்குவதிலும் அவர்கள் பெரிய அளவில் அக்கறை காட்டவில்லை என்பது தெளிவாக அறிய முடிகிறது.

தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை முதன் முதலில் முன்வைத்து பிரச்சாரம் செய்தது பாராளுமன்றம் சென்றது என எல்லா நடலடிக்கைகளையும் மேற் கொண்டவர்களும் இவர்களே. பின்னர் விடுதலைப் போராட்டம் தொடர்பில் இவர்கள் கடைப்பிடித்த பின்னடிப்பு நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் பெரியளவில் ஆத்திரத்தை கிளறி இருந்தது. இது படிப்படியாக மேல் வந்து ஆயுதப் பொராட்டமாக வலுவடைந்தது. இன்று ஆயுதப் போரடட்ம் தோல்வி கண்டுள்ள நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் முனைப்பு பெற்றுள்ளது ஆனாலும் அவர்களின் எதிர்கால நடவடிக்கைகள் எப்படி அமையப்போகின்றதுஎன்பதில் பல சந்தேக நிலைகள் காணப்படுகின்றன.

கடந்த 7-9-2009ல் ஜனாதிபதியை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சந்தித்தனர். இவர்கள் முன்வைத்த எந்த கோரிக்கையும் ஜனாதிபதி ஏற்கவில்லை என்பதே மேற்படி சந்திப்பின் பெறுபேறாக காணப்படுகிறது. முன்பு ஜனாதிபதி பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதெல்லாம் ஆணித்திரமாக தமது நிலையை வலியுறுத்தி சந்திப்பதை மறுத்துவந்த இவர்கள் தற்போது ஏன் திடீரென சந்திப்பதற்கு தயாராகின்றனர்.

வன்னி முற்றுகைக்கு பின்னர் தமிழ் மக்கள் பேரழிவை சந்தித்திது இருந்தனர். இந்த விடயத்தில் தமிழ்க முதல்வர் கருணாநிதி மீதும், இந்திய அரசின் மீதும் தமிழ் மக்களுக்கு கட்டுக்கடங்காத ஆத்திரம்காணப்பட்டது ஆனால் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழக முதல்வர் கருணாநிதியையும், இந்திய அரசையும் போய் சந்தித்துவந்தனர். இது இலங்கை தமிழர் தொடர்பாக முதல்வர் கருணாநிதியையும் இந்திய அரசும் காடடிய அக்கறை சரியானது என அங்கிகாரம் அளிப்பதை போலவே காணப்பட்டது.



வழமை போல் இந்தியாவுக்கு போய் வந்த பின்னர் தமிழ் தேசியகூட்டமைப்பினர் தமிழ் மக்கள் தொடர்பில் இந்தியா உறுதியான நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்றுஅறிக்கையும் விட்டனர் ஆனால் இந்தியா மரணச்சான்றிதழை பெறுவதில் காட்டிய அக்கறை இலங்கை தமிழர் விடயத்தில் காட்டவில்லை என்பதே உண்மையாகும். தற்போது கடந்த 7-9-2009ல் ஜனாதிபதியை தமிழ் தேசியகூட்டமைப்பு சந்தித்தபின்னர் அரசாங்கத்துடன் இணங்கி போகும் நிலை காணப்படுவது போல் தெரிகிறது.

இதை உண்மைப்படுத்தும் நிலைக்குரிய நிகழ்வுகள் காணப்படுகின்றன. வவுனியா நகரசபை பதவியேற்பு வைபவதில் தேசிய கீதத்துடன் பதவியேற்பு வைபவம் நடைபெற்றுள்ளது. ஒருகாலத்தில் 6வது அரசியல் திருத்தத்திற்காக பாராளுமன்றத்தை பகிஸ்கரித்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று தேசிய கீதத்துடன் பதவியேற்பை நிகழ்த்துகிறது.

அணமையில் ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுபபினர் பத்மினி சிதம்பரநாதனின் உரை ஒரு அரச சார்பு பாராளுமன்ற உறுப்பினரின் உரையை ஒத்திருந்தது. இந்த நிகழ்வில் கழந்துகொண்ட அமைச்சர் சரத் அமுனுகம ஜேர்மன் அரசாங்க செயற்பாடுகளை கண்டித்திருந்ததுடன் யுத்த வெற்றி பற்றியும் பயங்கரவாதத்தை ஒழிப்பதில் தாம் உலக சாதனை புரிந்துள்ளதாகவும் பெருமை பேசியிருந்தார். இதன் பின்னர் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் தமிழ் மக்கள் முதலில் அகிம்சை வழியில் போராடினர் பின்னர் வன்முறை மூலம் போராடிவந்தனர் இன்று வன்முறை தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க ஏதாவது செய்யுங்கள் என்று பிச்சை கேட்பது போல் பேசி இருந்தார் இருந்தார் வன்னி முகாம்களில் தவிக்கும் மக்களின் நிலை தொடர்பாக ஒரு வார்த்தை கூட இவர் பேசவில்லை. சிலசமயம் வன்னியில் அல்லல்படும் மக்களின் பலர் பத்மினி சிதம்பரநாதனுக்கு வாக்களித்து இருக்கலாம்.கடந்த 09-09-09ம் திகதி இடதுசாரி முன்னணி உட்பட பல இடதுசாரி அமைப்புக்கள் ஒன்றினைந்து வன்னி முகாம்களில் உள்ள மக்களை வெளியேற அனுமதிக்க கோரியே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேற்படி போராட்டத்தில் கலந்து கொள்ளமாறு தமிழ் தேசிய கூட்டமைப்புபிற்கு அழைப்பின் மேல் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் அவர்களில் எவரும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தென் இலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து போராடபோவதாக அறிவித்திருந்தார். எனவே இவர்கள் 9ம் திகதி பேபாராட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தது ஆனால் அவர்கள் வரவில்லை.இன்று சில தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் செயற்பாடுகளுக்கு நற் சான்றிதழ் வழங்குகின்றனர். சலர் ஜனாதிபதியைகூட கட்டி தழுவுகின்றனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பில் தமிழ் மக்கள் திடமாகவே உள்ளனர் என்பதை அண்மைய தேர்தல்கள் தெளிவாக கர்ட்டுகிறது. ஆனால் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் உணர்வை பிரதிபலிக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன

பத்திரிகையாளர் ஜே.எஸ் திஸ்ஸநாயகம் அவர்களுக்கு 20 வருட சிறைத்தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வழங்கி உள்ளார். பயங்கரவாதத்திற்கு ஆதரவாகவும், இனக்குரோதத்தை ஏற்படுத்தும் விதத்தில் கட்டுரைகளை வரைந்ததற்காகவுமே இந்த தண்டனை வழங்கப்படுவதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.



ஜனநாயகத்தை பேண விரும்பும் எவருக்கும் இந்த தீர்ப்பு அதிர்ச்சியை அளித்துள்ளதோடு இந்த தீர்ப்பானது அநியாயமானதும் அநீதியானதும் என்றே கொள்வார்கள். இந்த தீர்ப்பை பார்க்கின்றபோது தமிழர் விடுதலைக்காக கதைக்கும் எவரும் பயங்கரவாதத்திற்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற அடிப்படையில் சிறை தண்டனைக்கு உள்ளாகலாம்ஜனநாயகத்தை மதிக்கும் எவரும் நிச்சயமாக பயங்கரவாதத்தை ஆதரிக்க மாட்டார்கள். குறிப்பாக அப்பாவிகள், மற்றும் குழைந்தைகள், பெண்கள், மீது புரியப்படும் பயங்கரவாத நடவடிக்கையை ஆதரிக்க மாட்டார்கள். மறுபக்கத்தில் மாறுபட்ட அரசியல் காரணங்களால் சுதந்திரத்திற்காக போராடுகின்றவர்கள் மீது புரியப்படும் இராணுவ தாக்குதல்களையும் நாம் வன்மையாக கண்டிக்க வேண்டும்.அதெவேளை தேசிய ஒடுக்கு முறைக்கு எதிரான ஆயுதப்போராட்டம் நீதியானது ஆகும். இதை உலக முதலாளித்துவத்தின் நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையும் கொள்கை அளவில் ஏற்றுள்ளது.

இலங்கையில் சுதந்திரத்திற்காக போராடியவர்கள் என்று கூறப்படும் கெப்பற்றி பொல, வீர புரான் அப்பு ஆகியோரை மட்டுமன்றி கடைமையில் இருந்த முதல் பொலிஸ்காரரை கொன்ற சரதியல் கூட கதானாயகனாக சிங்கள மக்களால் கருதப்பட்டார் இவர்களை நீதி மன்றம் குற்றவாளிகளாகவே அடையாளம் கண்டது இவர்கள் மீது கடுமையான தண்டனையும் வழங்கியது. இன்று அந்த நீதிமன்ற தீர்ப்புகள் பிற்போக்கானது என்றும் கொள்ளப்படுகிறது. மேலும் இந்த தீர்ப்புக்களை இயற்கை நீதியின் அடிப்படையில் எவரும் ஏற்கவில்லை என்பதோடு நிபந்தனைகள் உள்ளடக்கிய அரசியல் மயப்பட்ட முடிவுகள் என்றே கருதப்படுகிறது. எனவே இந்த தீர்ப்பும் அந்த வகையை சார்ந்தது என்றே கூறலாம்.

திஸ்ஸநாயகம் இனகுரோதத்தை தூண்டியதாகவே குற்றம் காணப்பட்டுள்ளார். எனவே இதன் பொருள் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக யாரும் போராடினால், அதனை இன வன்முறைக்குள் கொண்டுவரப்படுவார். எனவே ஒடுக்கப்படும் தேசியத்துக்கான உரிமைக்காக போராடுகிறவர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உரிய போராட்ட இலட்சியங்களை கொண்டிருக்க முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. மறுபக்கத்தில் பேரினவாதிகளின் செயற்பாடுகள் குறிப்பாக இலங்கை சிங்களவர்களுக்கே சொந்தம் என்ற நிலைக்கு சட்டரீதியான பாதுகாப்பு கிடைக்கிறது. இங்கே புறக்கனிப்பு, மிரட்டல் போன்றவை சிங்கள ஒற்றை ஆட்சி அரசின் கீழ் நீதியானதும் நியாயமானதுமாக கொள்ளப்படுகிறது.

நான் நினைக்கின்றேன் படையினர் மேற்கொண்ட மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளால் ஏற்பட்டதை விட இந்த தீர்ப்பின் மூலம் சமூகங்களுக்கு இடையேயான நல் எண்ண நிலைமைகளுக்கு பெரும் கேடு ஏற்படலாம். இதனால் ஆயுதப்படையினர் இராணுவ நடவடிக்கைகள் மூலம் கொடிய அடக்கு முறைகள் மேற்கொண்ட நிலைமைகளிலும் அவர்கள் கதானாயகனாகப் போகின்றார்கள். இந்த யுத்தமானது கொடிய காட்டுமிராண்டிதனம் கொணடதாகும். இது இயற்கையாகவே மனித விழுமியங்களின் எல்லைகளை மீறிச் செல்லப்போகிறது. இறுதியில் வெற்றி பெற்றவரே முடிவை தீர்மானிப்பவராக இருக்கப் போகின்றார்.

காடையராக கருதப்படுபவர்கள்

பொதுவாக வெற்றி பெற்றவர் சரியானவராகவும் மறுபகுதியினர் பிழையானவர்களாகவும் காடையர்களாகவும் கொள்ளப்படுகின்றனர். இதுவே உத்தியோக பூர்வ வரலாறு ஆகும். அதிஸ்டவசமாக இந்த நிலையை சிலர் தமது அளப்பரிய தியாகத்தால் சிலசமயங்களில் தமது உயிரையும் அர்ப்பணித்து மாற்றியுள்ளனர். யேசுநாதரை கள்வனோடும், பயங்கரவாதியோடும் சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனால் அவரை பலர் கடவுளின் மைந்தன் என்று நம்புகின்றனர். யேசுநாதரின் முதல் சீடரான பீற்றரும் ஏனையோரும் றோமசாம்ராச்சியமும்,பிற்போக்கு யூத நிறுவனமும், யேசுநாதரை குற்றவாளியாக கண்டு தண்டனை வழங்க அதை ஏற்றுகாது யேசுநாதர் மனிதத்துவத்துக்காகவும், சமத்துவத்துக்காகவும் போராடியவர் என்றே செயற்பட்டனர்.

நான் ஒரு மார்க்சீயவாதியாக இருப்பதால் நிச்சயமாக கிறிஸ்துவ நம்பிக்கையையோ, தமிழ் தேசியத்தையோ நம்புகிறவன் அல்ல.ஆனாலும் போராடுகின்ற உணர்வை ஊட்டிய யேசுநாதரை நான் பெரிதும் மதிக்கின்றேன் அதேபோன்று திஸ்ஸநாயகத்தையும் தனது மக்களுக்காக போராடியமையினால் அவரையும் மதிக்கின்றேன்.

இந்த தீர்ப்பு உயர் நீதிமன்றத்தில் இருந்து அமைதியாக எடுக்கப்பட்டுள்ளது. இது சடுதியாக எடுக்கப்பட்டதல்ல. இந்த முடிவு கவனமான ஆய்வின் பின்னே எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறு நிபுணத்துவ ஆவணங்கள் இந்த மடிவுக்குள் உள்ளன. எமக்கு ஆயுதபிணக்கின் குழப்பங்களில் நிறைய அனுபவம் உண்டு. நாங்கள் இன்று ஆயிரக்கணக்கான இடம் பெயர்ந்த தமிழ் மக்களை பற்றியும் அவர்களின் நரக வாழ்வு பற்றியும் விவாதித்து கொண்டு இருக்கின்றோம் இத்தகைய சூழ்நிலையில் இந்த தீர்ப்பு போலியாக நிலவிய அமைதியை தகர்த்து எறிந்துள்ளது. மேலும் இணக்கப் போக்கை விரும்பும் தாராளநிலையில் உள்ள தமிழர்களுக்கு கூட இந்த தீர்ப்பு வேதனையை வழங்கி இருக்கும் என்னை பொறுத்தவரை ஒரு சில உதிரி தமிழர்களே கௌரவமான தீர்ப்பு என்று வரவேற்கலாம். தமிழ் இளைஞர்கள் எதிர்காலத்தில் நாங்கள் இராணுவ மேலாதிக்க நடவடிக்கையால் அதிகம் பாதிக்கப்பட்டோம், ஆனால் நீதி மன்றத்தீர்ப்பு மறக்கமுடியாத தண்டனையை வழங்கியுள்ளது. என்றே கூறுவார்கள் எனவே ஜனாதிபதி அவர்கள் இந்த சோக நிலை மீது தனது கண்களை திறந்து, தமிழ் அரசியல் கைதிகளுக்கு பகிரங்க மன்னிப்பை வழங்கி விடுதலை செய்யப்பட வேண்டும்.

நன்றி லக்பிம

# திஸ்ஸநாயகத்தின் வழக்கில் யார் குற்றவாளி கூண்டில்.

சுரேந்திர அஜித் ரூபசிங்க. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாவோவாதம்)

ஊடகவியலாளர் ஜே. எஸ் திஸ்ஸநாயகம் மார்ச் 7ம் 2009 வரை தடுத்து வைக்கப்பட்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மூன்று குற்றங்கள் சுமத்தப்பட்டு 31-08-2009ல் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்டு இவருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் இந்த தீர்ப்பின் மூலம் சுயநிர்ணய உரிமைக்காக குரல் கொடுக்கும் அனைவருக்கும் இத்தகைய தண்டனை வழங்கப்படும் என மறைமுகமாக எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் அவர்களின் பாதுக்காப்புக்காகவும் செயற்பட்டவராவார். இந்த அடிப்படையான உரிமை இன்று முற்றாக பறிக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரகாரம் இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும் இவரால் எழுதப்பட்ட கட்டுரைகளுக்காகவும் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார். இவரின் கட்டுரைகள் இனக்குரோதத்தை தூண்டுவதாகஅமைந்திருந்தன என அரசால் அர்த்தம் கற்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் அடிப்படையில் நவ காலனித்துவத்திற்கு சார்பாக ஆட்சியில் இருந்த ஒவ்வொரு ஆட்ச்சியாளருக்கும், எதிர்கட்சியினருக்கும் 20 வருட சிறைத்-தண்டனை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஏனென்றால் இவர்கள் அரசியல் தீர்வுகளை சீர்குலைத்ததாலும், இனக்குரோதத்தை தூண்டி விட்டதாலும் இந்த தண்டனை அவர்களுக்கு வழங்கப்படிருக்கவேண்டும். இந்த வழக்கை பொறுத்தவரையில் எனது அபிப்பிராயம் இந்த வழக்கு சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்படவில்லை என்பதேயாகும்.இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் இனவன்முறையை தூண்டின என்பதற்கான எத்தகைய ஆதாரங்களும் இங்கே நிரூபிக்கப்படவில்லை. வெளியிப்பட்ட சஞ்சிகையில் 50 பிரதிகள் விற்கப்பட்டிருந்தன எனவே பயங்கரவாத தடைச்சட்டமானது தன்னிச்சையாக அர்த்தம் கொள்ளத்தக்க விதத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது. நான் நினைக்கின்றேன் என்னைப்போல் ஏனைய அறிவாற்றல் உடைய எவரும் திஸ்ஸநாயகம் இனவன்முறையை தூண்டும் முயற்சியில் ஈடுபட்டார் என ஒருபோதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள், அவரது மனோபாவமும், அரசியல் நிலைப்பாடும் அப்படியானதல்ல இவர் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் தொர்பான நிலைப்பாட்டிலுமே இவர் இருந்தார்.

தமிழர் வாழும் பகுதிகள் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களும், குறிபார்த்து செயற்படுத்தப்படும் அரசியல் படுகொலைகளும், குறிப்பாக தமிழ் அரசியல் தலைவர்களை இலக்காக வைத்து செயற்படுத்தப்படும் கொலைகள் இந்த வரிசையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். எனவே நாம் அங்கே எத்தகைய பிரச்சினைகளும் இல்லை என வாதிட்டாலும் அங்கே அரசாங்கம் யுத்தத்தை முன் எடுத்து சென்றபோது எத்தகைய மனித இழப்புக்களும் ஏற்படவில்லை என கூறமுடியுமா. என்னைப் பொறுத்தவரையில் மேற்படி நடவடிக்கைகள் அறியாமையுடன் கூடிய வஞ்சக நடவடிக்கைகளாகும். இன்று முழு உலகத்திற்கும் வெளிப்படையாகவே இந்ந யுத்தத்தில் மிகப் பிரமாண்டமான அளவில் பாரிய இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது என தெரியவந்துள்ளது. அரசும் விடுதலைப் புலிகளும் இந்த இழப்புக்கு பொறுப்பாகும். அரசாங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் பயங்கரவாத செயற்பாடு இன்றி பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாது என மார்தட்டி பேசியுள்ளனர். இன்றும் இம் மக்கள் முட்கம்பி வேலிக்குள் பாதுகாத்தல் என்ற போர்வையில் தடுத்து வைத்திருப்பதால் இம் மக்களின் பாதுகாப்பு மனித உரிமைகள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி உள்ளது.

இராணுவ ஆட்சி அடக்குமுறை என்பவற்றுக்கு உள்ளாகி ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு தொடர்பாக குரல் எழுப்புவதை எப்படி துரோகம் என அடையாளப்படுத்தப்பட முடியும். முழு அளவிலானபாதுகாப்பும், மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றிருக்கும் நிலையில் அதற்கு எதிராக குரல் கொடுப்பது குற்றமாகுமா?. உலகத்தில் முதல் நிலையில் இருக்கும் அமெரிக்க ஏகாதிபத்திய வல்லரசில் கூட அங்குள்ள பொது மக்களுக்கும், ஊடகங்களுக்கும் வெளிப்படையான அரசியல் அமைப்பு ரீதியாக மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மேலும் அபுசறிப், வண்டலாமா போன்ற சிறைக்கூடங்களிலும் யுத்த பூமியாக விளங்கும் ஆப்கானிஸ்தான், ஈராக், பாலஸ்தீனம் போன்ற நாடுகளிலும் தமது சொந்த நாட்டிலும் இவர்கள் புரிந்த மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்க மக்களால் முடிந்தது. அங்கே பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு ஒப்பான சட்டம் நடைமுறையில் இருக்கின்றபோதும் அங்குள்ள மக்கள் தமது எதிர்ப்பை காட்டுவதற்கு எந்தவிதமான ஒடுக்குமுறைகள் மனித உரிமைகள் மீறல்களுக்கு எதிராக குரல் கொடுக்கவும் உரிமையுடையவர்களாக இருக்கின்றனர். ஆனாலும் நேட்டோ மற்றும் அமெரிக்க படையினர் ஈரான், ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட செயற்பாடுகளை எப்படி நியாயப்படுத்தினார்களோ அதை இங்கே உதாரணமாக இங்கேயும் மேற்கொள்ளப்படுகிறது இது ஒரு உருட்டு புரட்டான நியாயமாக மாறியுள்ளது. எது எப்படி இருந்தாலும் அது ஈரான், பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான, முல்லைத்தீவு, சாம்பூர், வாகரை எங்கு நடந்தாலும், குற்றம் மக்கள் மீது இளைக்கப்பட்டிருந்தால்அது கண்டிக்கப்படவேண்டியதாகும். இங்கே யாரும் ஆட்சியாளரின் செயற்பாடுகளை கண்டித்தால் அவர்கள் இனங்காணப்பட்டு வேட்டையாடப்படுவதுடன் அவர்கள் மீது துரோகி என்ற முத்திரையும் குத்தப்படும் சிலருக்கு தேசத்துரோகியாக தெரிபவர் மற்றவர்களுக்கு தாய்நாட்டை நேசிப்பவர்ராக தெறியக்கூடும். சிலருக்கு பயங்கரவாதியாக தெரிபவர் மற்றவருக்கு விடுதலைப்போராளியாக தெறியலாம். நீங்கள் போராட்டத்தில் எந்த பக்கத்தில் இருக்கின்றீர்கள் என்பதை பொறுத்துத்தான் இவை அமையும்.நாம் விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் எனக்கூறி யாரையும் சிறையில் அடைக்க முற்படுவோமாயின் முதலில் சிறையில் அடைக்கப்படவேண்டியவர்களாக கௌரவ பசில் ராஜபக்ஸ, கௌரவ மறைந்த சிறிபதி சூரியாச்சி கௌரவ மங்கள சமரவீர இவர்களுடன் அன்று ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் முன்னனியின் உயர்நிலை தலைவர்களையே முதலில் சிறையில்

7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமைகளின்

# அடிமைகளின் தலைவன் ஸ்பாட்டகஸ்

வரலாற்று நாயகர்கள்

(நடராஜா ஜனகன்)


ஸ்பாட்டகஸ் என்ற அடிமைகளின் தலைவனை மூன்று கோணங்களில் ரோமானயர்கள் பார்த்தனர். அவனை அந்நியகாட்டுமிராண்டியாக, ரோமானிய உயர்குடியினரை மகிழ்விக்கும், சண்டையிடும் விளையாட்டில்ஈடுபடுபவனாக (இச்சண்டையில் உயிர் போவது உறுதியானதாகும்)ஒரு அடிமையாக


இவன் மீது அதிகம் வெறுப்பை கொண்டவர்களாகவே ரோமானியர்கள் காணப்பட்டனர். ஏனென்றால், இவன் அடிமையாக இருந்தவேளையில் தப்பித்து சென்று 60,000 அடிமைகளை திரட்டி ரோமானிய பேரரசுடன் இரண்டு வருடங்கள் போரிட்டமையாகும். ஸ்பாட்டகஸ் கி.மு முதலாம் நூற்றாண்டில் தராஸி என்று அழைக்கப்படும் பல்கேரியாவில் பிறந்தான். இந்நாட்டின் மீது ரோம படையெடுப்பு நிகழ்ந்துள்ளது. இங்குள்ளவர்களை ரோம இராணுவம் தனது இராணுவ தேவைக்காக முழு அளவில் உபயோகித்ததும் இருந்துள்ளது.

ஸ்பாட்டகஸ் அடிமைநிலையில் இருந்து தப்பிக்க முனைந்தபோது இவன் பிடிபட்டு அடிமையாக விற்கப்பட்டான். இவனை அவர்கள் ரோமானியர்களை மகிழ்விக்கும் சண்டையில் ஈடுபடுகின்றவர்களுக்கு பயிற்சியாளனாக வைத்திருந்தனர் இங்கனம் சண்டையில் ஈடுபடுகின்றவர்களின் ஆயுட்காலம் அற்பமானதாகும். அனேகமாக 35வயது எட்ட முன்பே இறந்து விடுவார்கள் பலர் 25வயதுக்குள்ளே இறந்துவிடுவார்கள் இவர்கள் சண்டையின் போது மற்றவர்களை மகிழ்விப்பதற்காக ஆத்திரப்பட்டு, அவமானப்பட்டு இறப்பெய்து விடுகின்றார்கள். ஒருகட்டத்தில் ஸ்பாடகஸ் தன்னுடன் இருந்த அடிமைகளில் 200 பேரை தன்னுடன் இணைத்துக் கொண்டு தமது கையில் கிடைத்த உபகரணங்களை (கத்தி) போன்றவற்றை ஆயுதங்களாக பாவித்து அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

ஸ்பாட்டகஸ் புத்தி கூர்மைமிக்க போர்களில் அனுபவம் கொண்டிருந்ததுடன், சிறந்த கரந்தடி வீரனாகவும் இருந்துள்ளான். ஸ்பாட்டகஸின் எழுச்சிக்கு எதிராக திரண்டு வந்த முதல் ரோமானிய படை எடுப்பை அவன் நிர்மூலமாக்கியுள்ளான். வழமையாக அடிமைகளின் கிளர்ச்சி என்றே எண்ணியே ரோமானிய அரசு பயிற்சி இல்லாத இராணுவத்தினரை, இரண்டாம் நிலையில் உள்ள தளபதிகளின் கீழ் மேற்படி கிளர்ச்சியை அடக்க அனுப்பியிருந்தது. ஸ்பாடகஸின் வெற்றியானது மேலும் பலர் அவனது இராணுவத்தில் இணைய சந்தர்ப்பத்தை வழங்கியது.

கிராமங்களில் இருந்து பெருமளவிலான அடிமைகள் ஸ்பாட்டகஸின் இராணுவத்தில் இணைந்தனர். இவர்களை ரோமானியர்கள் விலங்கிட்டு சவுக்கினால் அடித்து துன்புறுத்தியே வேலை வாங்கினார்கள் இவ்வண்ணம் தப்பிவந்த அடிமைகளின் விலங்குகள் உருக்கப்பட்டு வாளும், ஈட்டியும் தயாரிக்கப்பட்டன. ஸ்பாட்டகஸ் தன்னுடன் இணையும் வீரர்களுக்கு வெற்றி கொள்ளப்பட்ட சொத்துக்களில் பாதியை வழங்கினான். அதனால் இவனது படையில் அனேகர் இணைந்தனர். இங்கனம் சொத்துக்கள் பகிரப்பட்டது நீதிக்காகவோ, முன்னெச்சரிக்கைக்காகவோ, என்பதை அறிய முடியவில்லை. மேலும் அடிமைகளின் தலைவன் தங்கத்தையும், வெள்ளியையும், கொள்ளையிடும் போது அங்கே ஊழலும், சமத்துவமின்மையும், தோன்றக்கூடிய நிலைமைகள் தோன்றலாம். எனவே தீவிரமான சம பங்கு என்பது அக்காலத்தில் புதியதொரு நிலைமையை உருவாக்கியது. ஸ்பாட்டகஸ் எல்லா தேசிய இனங்களுடனும் இணைந்து செயற்படும் போக்கை கொண்டிருந்தான். இக்காலப்பகுதியில் அங்கே தராச்சியன், காவுல்ஸ், செலிற்ஸி, ஜேர்மனியர், என பல தேசியங்கள் இருந்தன. எனவே ரோமாபுரியில் பல்வேறுபட்ட தேசியங்களின் அடிமைகள் இருந்தமையால் அங்கே பலம்பொருந்திய பரந்தளவான வர்க்க





இணக்கப்போக்கு காணப்பட்டது. ஆனாலும் கேந்திர வேறுபாடுகள் இந்த சமூக இறுக்கத்தில் அழுத்தத்தை கொடுத்தது. இதை ஸ்பாடகஸ் அறிந்தே வைத்திருந்தான் மீண்டும் ரோமானிய படையெடுப்பை எதிர்கொள்ள வேண்டி இருந்ததால், இவ்விடம் தனக்கு மரணபூமி என்பதை ஸ்பாட்டகஸ் உணந்திருந்தான். எனவே அல்ப்ஸ் பகுதியூடாக இன்றைய பிரான்சுக்கு செல்வதே அவன் திட்டமாக இருந்தது ஆனால் ஏனைய தலைவர்கள் முக்கியமாக காவுல்ஸ், கிறிகஸ் தேசியங்களை சார்ந்தவர்கள் தொடர்ச்சியான யுத்த வெற்றிகளால் பிழையான பாதையை தெரிவாகக் கொண்டிருந்தனர். இவர்கள் இத்தாலியை மேலும் கொள்ளையிடவும், ரோமாபுரிக்குள் செல்லவும் விருப்பம் கொண்டிருந்தனர்.

இதன் விளைவாக முரண்பாடு ஏற்பட்டு பிரிவினை ஏற்பட்டது இதன்காரணமாக கி.மு 72ம் ஆண்டில் இறிக்ஸ் பிரிவை சேர்ந்த 10,000 படையினர் ரோம படைகளால் தோற்கடிக்கப்பட்டது. இவ்வேளையில் ஸ்பாட்டகஸ் இராணுவம் அல்ப்பீஸ் பகுதியில் இருப்பது அபாயம் என கருதியது. மேலும் திராஸ் பகுதியில் இருப்பதும் நீண்ட காலத்துக்க நல்லதல்ல என்பதுடன் ரோம படையெடுப்பு எந்த வேளையிலும் நிகழலாம் என உணர்ந்திருந்தான். எனவே சிசிலிக்கு போவது நல்லது என முடிவு எடுக்கப்பட்டு சிசிலிக்கு சென்றது அங்கே கடற் கொள்ளையர்களால் ஸ்பாட்டகஸ் இராணுவதிதிற்கு பின்னடைவு ஏற்பட்டது. இவ்வேளையில் ரோமானிய பேரரசு தனது இராணுவத்தை ஒருமுகப்படுத்தி ஸ்பாட்டகஸ் போராளிகளுக்கு எதிராக பெரும் போரை தொடுத்தது. இப்போரில் ஸ்பாடகஸ் இராணுவம் தோற்கடிக்கப்பட்டது.

இது கி.மு ஏப்ரல் 72ம் ஆண்டில் நடந்தது இந்த யுத்தத்தில் ஸ்பாட்டகஸ் கொல்லப்பட்டதுடன் 6000 போராளிகளும் உயிருடன் பிடக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டனர்.ஸ்பாட்டகஸ் இறப்பை எய்திருந்தாலும் அவனது பெயரை ரோம உயர் குடியினர் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். ரோம வரலாற்று ஆசிரியர்களான சலுஸ்ற், லவி, புலுற்ச், அபீபியான், புலோறஸ் இவர்களின் தகவல்களில் இருந்தே ஸ்பாடகஸ பற்றி அறிய முடிகிறது. ஆனாலும் இவர்கள் ஸ்பாட்டகஸ் எழுச்சியை குறிப்பிட வில்லை இவர்கள் ஸ்பாட்டகஸை பயங்கரவாதியாகவும், வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுபவனாகவும் காட்டுகின்றனர். இவர்கள் ஸ்பாட்டகஸ் இராணுவம் செய்த கொடுமைகள் கொள்ளைகள் பற்றி குறிப்பிடுகின்றனர். ஆனால் இங்கனம் ஈடுபட்டவர்கள் கிறிஸ்கஸ் என்னும் தளபதியின் கீழ் இருந்த இராணுவத்தினரே. ஆனால் இது விதிவிலக்காகவே உள்ளது. உண்மையில் ஸ்பாட்டகஸின் நடத்தையை ஒப்பிட்டால் இது சிறிய விடயமே. இந்த வரலாற்று ஆசிரியர்கள் ஸ்பாட்டகஸ் உயர்குடியினரை மகிழ்விக்கும் சண்டையிடம் விளையாட்டுக்காக தான் கைது செய்த 300 ரோமானிய கைதிகளை ஈடுபடுத்தியதாக குற்றம் சாட்டுகின்றனர். இவர்கள் ஏன் ஸ்பாட்டகஸ் எழுச்சி கொண்டான்? என்பது பற்றியோ அக்காலத்தில் நிலவிய ஏற்ற தாழ்வு நிலைமையை குறிப்பிடுவதில்லை.

மேலும் இந்த வரலாற்று ஆசிரியர்கள் ஸ்பாட்டகஸ்தான் சிறைபடுத்தியிருந்த ரோமன் கைதிகளை கொடுமைபடுத்தியதை தகவழுடன் கண்டித்துள்ளனர். ஆனால் இவர்கள் ஸ்பாடகஸை தோல்வியுறச் செய்தபின் ரோமன் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 6000ஸ்பாடகஸின் கைதிகளை சித்திரவதை செய்யப்பட்டதை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

ஸ்பாட்டகஸ் மிகப்பெரய மனிதபிமானம் கொண்டவன் என்று யாரும் கூறவில்லை ஆனால் ஸ்பாட்டகஸின் நடவடிக்கைகள் அடிமைகளை வைத்திருந்தவர்கள் புரிந்த அட்டூழியங்களுக்கு ஈடாக ஒப்புவிப்பதில் வரலாற்று ஆசிரியர்கள் ஸ்பாட்டகஸ் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியுள்ளனர். ஸ்பாடகஸ் உயர் குடியினரை மகிழ்விப்பதற்காக சண்டையிடுபவர்களையும் கிராமிய அடிமைகளையும் விடுதலை செய்ததன் ஊடாக முழு அடிமை முறையையும் இல்லாதொழிக்க முடிந்ததா? என்பதே அவர்களின் பிரதான கேள்வியாக இருந்தது.

இவர்களின் வாதம் வரலாற்று ஆய்வின் பிரகாரம் ஸ்பாடகஸ் இரண்டு விதமான போக்கை கொண்டிருந்ததாகவும் ஆனால் ஸ்பாடகஸின் பிரதான பலவீனமாக அவனால் நகர்புற அடிமைகளை தனது போராட்டத்தில் இணைக்க முடியாமல் போனதையே குறிப்பிடுகின்றனர். சிலர் இது அவனது அரசியல் பலவீனமாக கொள்கிறார்கள். ஸ்பாடகஸ் 60,000 அடிமைகளை விடுதலை செய்துள்ளான். எனவே இந்த 60,000 பேரும் அவனுக்கு சாதகமாக 60,000 வாதங்களை முன்வைத்திருக்கிரார்கள் எனவும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஸ்பாடகஸின் எழுர்ச்சி கார்ல் மாக்ஸையும் கவர்ந்துள்ளது. ஸ்பாடகஸ் பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான பிரதிநிதியாக அன்று விளங்கியுள்ளான். என கார்ல் மாக்ஸ் கூறியுள்ளார். 1960ல் ஸ்பாடகஸ் தொடர்பான ஒரு சினிமா திரைப்படம் வெளியாக இருந்தது. இதன் கதாநாயகனாக (ஸ்பாட்டகஸ்) கேக் டக்ளஸீ நடித்திருந்தார்.

உண்மையில் ஸ்பாட்டகஸின் போராட்டம் அடிமைகளின் சுதந்திரத்திற்கான போராட்டமாகும். ஏழைகள் வசதிபடைத்தவர்களுக்கு எதிராக நிகழ்திய போராட்டமாகும். ஸ்பாடகஸ் அன்றைய அடிமைகளின் அடிமை விலங்கை உடைத்து எறிந்தான். அந்த நாட்களில் அடிமைகளிடம்அவர்கள் பிணைத்த விலங்கை தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. இன்றைய நவீன உலகிலும் ஸ்பாட்டகஸின் நம்பிக்கைகள் ஏழைகள் மீது இணைக்கப்பட்டிருக்கும் ஏராளமான விலங்குகளை உடைத்தெறியும் நிலை உருவாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இருளுக்குள் நெப்போலியன்களும், கிற்லர்களும் செயற்படுகின்றனர்

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன



தளபதி சரத்பொன்சேக இன்று அதி முக்கியம் வாய்ந்த அரசியல் விவாதப் பொருளாக மாறியுள்ளார். இவர் எத்தகைய அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபடவில்லை. அதேநேரம் தான் அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை என்றும் கூறியிருந்தார். ஆனால் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் இவரால் விடுக்கப்பட்ட அறிக்கைகள் நிச்சயமாக ஒற்றை ஆட்சியினை வலியுறுத்தும் சிங்கள பேரினவாதிகளின் கருத்தை ஒட்டியதாகவே காணப்பட்டது. மேலும் அரசியல் அமைப்பின் 13 வது திருத்திற்கு மேலாக அதிகாரப்பரவலாக்கம் மேற் கொள்ளப்படுமேயானால் அதனை நிறுத்த இறுதிவரை அர்பணிப்புடன் செயற்படுவேன் என்றும் இவர் சூழ் உரைத்தர். இதேநேரம் இவர் எந்த அரசியல் கட்சியையோ, எந்தஒரு அரசியல் கட்சியின் தலைவரையோ, ஆதரிக்காததுடன், எதிர்காலத்தில், தான் அரசியலில் ஈடுபட போவதில்லை என தொடர்ந்தும் கூறிவந்துள்ளார். வரலாற்றில் பல இராணுவதலைவர்கள் மிக அதிகாரத்துடன் மிளிர்ந்த தலைவர்கள் பின்னர் அரசியலுக்குள் இழுத்து வரப்பட்டமைக்கு பல உதாரணங்களை பார்க்க முடியும் யூலியசீசர், குரம் பெல், நெப்போலியன் பொனபாட் இவர்களுள் சிலராவார் யூலியசீசர் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களின் பாதுகாப்பை நிலைநிறுத்துவதறகுகாக தலையீடுகளை மேற்கொண்டதுடன் குடியரசையும் பொருட்படுத்தாது செயற்பட்டுள்ளார். குரம்பெல் நெப்போலியன் ஆகியோர் புரட்சியின் பின்னர் பாராளுமன்றத்தை பெயரளவில் வைத்துக்கொண்டு சர்வாதிகாரமாக செயற்பட்டுள்ளனர். ஆனால் இன்று இராணுவத்தலைவர்களின் இத்தகைய போக்குகள் வரலாற்றில் தோற்கடிக்கப்பட்டள்ளது. ஆனாலும் உலக முதலாளித்துவத்தின் கருணையுடன் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சாத்தியப்படக் கூடிய ஏதுநிலை உள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தொழிலாளர் அமைப்புக்கள் பலமான நிலையில் இருப்பதால் அங்கே நவீன கிற்லர்களோ, பொனப்பாட்டுகளோ, தோற்றம் பெற அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். இங்கேயும் சிங்கள நெப்போலியன் உருவாவதற்கு சந்தர்ப்பமே இல்லை.சில மாதங்களுக்கு முன்னர் ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐய்வன் என்னுடனும், விரிவுரையாளர் வியங்கொடவுடனும் கடுமையான விவாதத்தில் ஈடுபட்டார். ஐவனின் வாதம் மகிந்த ராஜபக்ஸ சிங்கள நெப்போலியன் எனபதாகும். இத்தகைய சிந்தனை போக்கு முதலாளித்துவ புத்திஜீவிகள் மட்டத்தில் உள்ளது.இன்று மகிந்த மிகவும் சுறுசுறுப்பாக உள்ளார். மேற்குலகத்தை சாந்தப்படுத்துவதற்குரிய செயற்பாடுகளில் அவர் இறங்கியுள்ளார். மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளில் மகிந்த மேற்குலகத்தை சாட்டினாலும் மறுபுறத்தில் அவர்களை திருப்திபண்ணும் செயற்பாடுகளை செய்து வருகின்றார்.இதேநேரம் இந்திய தலைவர்கள் மிக உறுதியான ஆதரவை மகிந்தவுக்கு வழங்கி வருகின்றனர். மேலும் இந்திய சாம்ராச்சியத்தின் மகாராணியாக இருக்கும் சோனியா காந்தி மகிந்த ராஜபக்ஸ அவர்களின் பாவச்செயல்களை மூடிமறைக்க தமிழ் தேசியத்தின் மையப்பகுதியைக விளங்கும் தமிழகத்தில் இருந்து தூதுக்குழுவை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். டெல்லி பிராமணிய ஆட்சியாளர்கள் எந்தநேரமும் மகிந்த சிற்றரசருக்கு தமது ஆதரவை நல்கியே வருகிறது.மகிந்த அவர்கள் விரும்பி இருந்ததை நிறைவேற்றி உள்ளார். இவர் இந்திய, அமெரிக்க சீன முதலீட்டாளர்களுக்கு இராணுவத்தால் மீட்டு எடுக்கப்பட்ட பிரதேசங்களில் முதலீடு செய்யவாய்ப்பு வழங்கியுள்ளார். சர்வதேச நிதி முதலீட்டாளர் ஒருவர் அண்மையில் இலங்கை உலகத்தில் சிறந்த முதலீட்டுக்குரிய நாடு என குறிப்பிட்டுள்ளார். 60விகித அரச ஆதரவும் இராணுவ பின்புலமும் வேறு எங்கே கிடைக்கும். இங்கே அரசாங்கமானது முழு நிப்பரப்பையும் ஏனைய வளங்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளது. இன்று அவற்றை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குவிற்பதற்கு தயராகிறது.இன்று இந்த நாட்டில் முழுத் தொழிலாளர்களுமே திறந்த வெளி சிறையில் உள்ளனர்.தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டை பேரினவாதிகளும் அரசாங்க அடிவருடிகளும் வைத்திருக்கின்றனர். அவசர காலச்சட்டமும், பயங்கரவாத தடைச்சட்டமும் தொழிற்சங்கங்களின் சட்டரீதியான உரிமைகளை செல்லாக்காசாக்கி உள்ளன இன்று பேரினவாத முகாம் பிழவுபட்டு உள்ளது.

மிகந்த ராஜபக்ஸ தளபதி சரத்பொன்சேக்காவை அதிகாரமையத்தில் இருந்து ஓரம் கட்டியுள்ளனர். இவரை விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக ஆக்கியுள்ளார்.மகிந்தவின் பிரதான சீடரான விமல் வீரவன்ச நாட்டில் சதி நிலைமைகள் உருவாக உளளதாக கடுமையாக குரல கொடுத்துள்ளனர். ஆம் நிச்சயமாக சதி நிலைமை உள்ளது அது சரத்பொன்சேகாவை வெளியேற்றம் சதியாகும். இந்தி சாம்ராச்சிய மகாராணி சோனியா தமிழ் தலைவர்களுக்கு எலும்பு துண்டுகளை போடுவது போல் சிறு அதிபாரங்களை வழங்கினால் மகிழ்வடையலாம். மறுபக்கத்தில் ஜனாதிபதி வேட்பாளராக சரத்பொன்சேக்கா நிறுத்தப்பட்டால் முதலாளித்துவ முகாம் சிக்களுக்குள் செல்லும் படைவீரர்கள் மத்தியில் அமைதியின்மை காணப்படுகிறது. எதிர்காலம் இருட்டானது என அவர்கள் உணர்ந்துள்ளனர். அவர்கள் காக்கி உடை அணிந்த குறைந்த வேதனை தொழிலாளர்களாக மாற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனர்.இவர்களுக்கு தொழிலாளர்களுக்கு உரிமைகள் வழங்க்கப்படமாட்டாது.ஒருநாள் காக்கி தொழிலாளர்கள் எழுச்சி கொள்ளும்போது இந்த சிங்கள நெப்போலியர்கள் ஒளிப்பதற்கு இடம் இருக்காது.

(லக்பிமயில் வெளிவந்ததில் முழுமையான கட்டுரை)

3

ஊயிரை தியாகம் செய்தனர். 1987ல் 60,000 மேற்பட்ட இளைஞர்கள் தமது உயிரை பலி கொடுத்தனர். இதன் உச்சக்கட்டமாக கட்சியின் தலைவர் றோகணவிஜய வீராவே பலியானார்.இவர்கள் ஏன் உயிர் துறந்தனர்?.இன்று இவையாவும் வரலாற்று பதிவுகளாக தூசுபிடித்த ஆவணங்களாக்கப்பட்டுள்ளது. ஜே.வி.பி இன்று ஒரு சந்தர்ப்பவாத அமைப்பாக மாறியுள்ளது.

**எதிர் பிரசாரங்கள்.**

இவற்றின் இடையே ஜெனரல் சரத்பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்கு அதிதீவிர சிங்கள தேசியவாத சக்திகள் தமது கடுமையான எதிர்ப்பை காட்டியுள்ளன. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், தேசப்பற்றுள்ள பிக்குமார் முன்னணி, விமல் வீரவன்சாவின் தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை வண.மெதகம தம்மானந்த தலைமையில் ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனரல் பொன்சேகா தமது எதிர்ப்பையும் மீறி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாராயின் அவருக்கு எதிராக மகாசங்கத்தினரின் அக்கினி உத்தரவு பிறப்பிக்கப்படும் என எச்சரித்துள்ளார்.

இவற்றை பார்க்கின்றபோது ஆட்சியில் இருக்கும் பேரினவாத சக்திகள் வரை காலத்தில் உள்ளனர் என்பது தெளிவாகின்றது.இன்று தென் இலங்கை மக்கள் பேரினவாதிகளை அம்மணமாக பார்ப்பது போலவே அவர்களை பார்க்கின்றனர். யுத்தம் நடைபெறும் காலப்பகுதியில் நாட்டில் அனைத்து பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் பயங்கரவாதம் என்றும் அது தோற்கடிக்கப்பட்டால் சகல வரப்பிரகாசங்களும் மக்களுக்கு வந்துசேரும் என்றே கூறிவந்தனர். ஆனால் நடந்தது என்ன யுத்தம் முடிந்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில் வாழ்க்கை செலவு உச்ச நிலைக்கு சென்றுள்ளது. ஊழலும், வீண்விரயமும், அரச மட்டத்தில் தாண்டவமாடுகிறது. எனவே பொறுமையை இழந்த தொழிலாளர்கள், மாணவர்கள் பொதுமக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

**தேர்தல் என்ற நிலை ஏன் ஏற்பட்டது.**

இன்று அரசாங்கம் தனது செல்வாக்கு தளங்களில் ஓட்டைகள் விழுந்து வருவதை உணர்ந்துள்ளது. எனவே காலம் தாழ்த்த தாழ்த்த செல்வாக்கு முற்றாக சரிந்துவிடும் என்று அதற்கு தெரிந்துள்ளது. எனவே தான் 2010ல் [illegible] தேர்தலை இரண்டு [illegible] முன்வந்தனர்.ஆட்சி அதிகாரத்தில் எப்படியும் ஏறிவிட வேண்டும் என்பதற“காக அன்று எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரனாயக்கா 24அணித்தியாலத்தில் சிங்களம் ஆட்சிமொழியாகும் என கூறி ஆட்சிக்கு வந்தார். அன்று அவர்கள் தமது ஆட்சியை “அபே ஆண்டுவ” (எங்கள் ஆட்சி) என்றே கூறினர். இது நடந்து ஐந்து தகாப்தங்களின் பின்னர்மகிந்த சிந்தனை என்று பதவிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள் “அப்பே பவுல ஆண்டுவ” (எங்கள் குடும்ப ஆட்சி) என்ற நிலைக்கு நாட்டை கொண்டுவந்துள்ளனர்.இன்றைய மகிந்த ஆட்சி எங்கும் குடும்பம் எதிலும் குடும்பம் என்ற நிலையிலேயே உள்ளது.


1

வருவதாக அறிய முடிகிறது. போராட்டங்கள் செய்தால் வடக்கு கிழக்கு மக்களின் நிலைதான் மலையக மக்களுக்கு கிடைக்கும் என்று கூறியே போராட்டங்களில் இருந்து ஒதுங்கி வந்தனர் மலையக தலைவர்கள். அரசாங்கத்துடன் இணைந்து செயறபட்டால் தான் மலையக மக்களுக்கு அபிவிருத்திகளை செய்யமுடியும் என்று கூறியே அரசாங்கத்துடன் இணைந்தும் இருந்தனர். இன்று மலையக யுவதி ஒருவரின் சடலத்தை கொண்டு வருவதற்கு கூட அவர்களுக்கு நேரம் கிடைக்காத நிலை தோன்றியுள்ளது. எனவே உண்மை தன்மையை மலையக மக்கள் புறிந்து கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் நிலைமை தொடர்பாக எள்ளளவும் கவலை கொள்ளாத மலையக தலைவர்கள்.

சுந்தரம் மகேந்திரன்.



மலையக மக்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்த மலையக தலைவர்கள் இன்று வடக்கு கிழக்கு மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கும் குழி பறிக்கும் செயற்பாட்டில் இறங்கியுள்ளனர். வன்னியில் நடைபெற்ற மனித அவலம் தொடர்பாக உலகத்தின் கண்டனங்களுக்கு இலங்கை அரசாங்கம் முகம் கொடுத்து வருகின்றது. தமிழ்மக்களின் விடுதலை போராட்டத்தை இந்திய அரசாங்கம் தோற்கடிப்பதில் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டு வந்தது. குறிப்பாக இவ்விடயத்தில் சோனியாகாந்தியின் செயற்பாடு மகத்தானதாக விளங்குகின்றது. தனது செயற்பாடுட்டுக்கு ஆதரவாக தமிழக முதல்வர் கருணாநிதியின் ஒப்புதலையும் சோனியா பெற்றிருந்தார்.

எனவே மகிந்த அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சிகளில் சோனியா ஈடுபட்டிருந்தார். இதன் வெளிப்பாடாகவே தமிழ் நாட்டு தூதுக் குழு இலங்கை வந்து வன்னியில் இடம் பெயர்ந்தது, முட்கம்பி முகாம்களில் வாழும் மக்களை பார்த்து சென்றது. இந்த தூதுக் குழுவிற்கு மலையகத்தலைவர்கள் பலத்த வரவேற்பைவழங்கி இருந்தனர். இதில் உள்ள வினோதம் என்னவென்றால் தமிழக தூதுக்குழுவை சாதாரண தோட்டமக்களோ, அவர்களின் பிரதிநிதிகளோ சந்திப்பதற்கு எத்தகைய ஏற்பாடுகளும் இடம் பெறவில்லை. மலையக மக்கள் தமது பிரச்சினையை தூதுக் குழுவிற்கு தெரிவிப்பதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. தமிழக தூதுக்குழுவின் வருகையே மகிந்த அரசை காப்பாற்றுவதற்கான முயற்சியாக இருந்தமையால் மக்களை சந்திக்கும் விடயத்தில் தூதுக்குழுவும் அக்கறைகாட்டவில்லை மலையக தலைவர்களும் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

வன்னி மக்களின் நிலை திருப்தி கரமாக உள்ளது என தமிழ் நாட்டுதூதுக் குழு சான்றிதழ் வழங்க, தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த ஆருமுகம் தொண்டமானும், முத்துசிவலிங்கம் வன்னி மக்களின் நிலை மேம்பட்டுள்ளதாக சாட்சியமளித்துவிட்டு வந்துள்ளனர்.

மேலும் மஸ்கேலியாவை சேர்ந்த இரு யுவதிகள் கொலை செய்யப்பட்ட நிலையில்,அதன் அதிர்ச்சி அகலாத நிலையில் தற்போது காலி மாவட்டத்தில் நெலுவ தோட்டத்தில் 13வயது தமிழ் சிறுமியை மேலதிக நீதிபதி பொருவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.மேற்படி சிறுமியின் தந்தையை சங்கிலியால் பிணைத்து குறிப்பிட்ட மேலதிக நீதிபதி தாக்கியதாகவும் தெரிய வருகிறது.

அதேபோன்று பம்பலப்பிட்டியில் மனநிலை பாதிக்கப்பட்ட சிவகுமாருக்கு என்ன நடந்தது என்பதை முழு உலகமுமே அறிந்துள்ளது. எனவே எங்கு பார்த்தாலும் மலையக மக்கள், மலையக இளைஞர்கள் மலையக சிறுமிகள்பாதிப்புக்கு உள்ளாகும் நிலையே காணப்படுகிறது. இவை தொடர்பாக மலையக தலைவர்கள் என்ன செய்கிறார்கள்? மத்தியமாகாணசபைக்கு தெரிவான 8 மலையக தமிழ் உறுப்பினர்களில் மாகாணசபை நடவடிக்கைகளில் இரண்டு தமிழ் உறுப்பினர்களே பங்கேற்பதாக அறிய முடிகிறது. இவர்கள் கொடுப்பனவுகளை மாத்திரம் தவறாது பெற்றுக் கொள்வதாக தெரிகிறது.தேர்தல் கால விளம்பரங்களுக்காக செலவிடும் பணத்தில் ஒரு சிறு பகுதியை மலையக மக்களின் நலனிற்காக செலவிட்டால் கூட மலையக மக்களின் பிரச்சினையில் சில என்றாலும் குறைய வாய்ப்பு உண்டு.

தற்போது மலையக மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெரியளவில் பாதிப்புக்குளாகி வருகிறது. இன்னும் பத்து ஆண்டுகளில் மலையக மாணவர்களின் கல்வி நிலை மோசமாக பாதிக்கும் உள்ளாகும் அபாய நிலை தோன்றி இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.இலங்கையில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகல் காரணமாக மலையக மாணவர்களே அதிகமாக பாடசாலைகளில் இருந்து வெளியேறுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் வறுமை நிலையாகும். தென் மாகாணத்தில் தோட்டங்களில் வாழும் மலையக மக்கள் சொல்லொணா துயரங்களுடன் வாழ்கின்றனர். இம் மக்கள் அடிமைகளை விட மோசமான நிலையில் வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். இம்மக்கள் இதுவரை ஒரு நாள் என்றாலும் தற்போதைய மலையக தலைவர்களான ஆறுமுகம் தொண்டமான், சந்திர சேகரன் மனோகணேசன் போன்றவர்களை தமது பகுதிக்கு வருகை தவரவில்லை என மிகவும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். ஆனால் அம் மக்களின் வேதனத்தில் சந்தாப் பணத்தை மாத்திரம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சுருட்டிக் கொண்டு போகிறதாம்.

இன்று மலையக தலைவர்கள் அனைவரும் கொழும்பிலேயே சஞ்சரிக்கின்றனர். இவர்கள் மலையக மக்கள் தொடர்பாக தலைநகரத்தில் எத்தகைய போராட்டங்களையும் நடத்தவில்லை இதற்காக இவர்கள் மலையகத்தில் நிறைய போராட்டங்களை நடத்துகிறார்கள் என அர்த்தம் கொள்ள முடியாது. மலையக தொழிலாளர்களின் நாளாந்த கூலி ரூபா 500 போராட்டத்தை காட்டிக் கொடுத்த கையோடு வடக்கு கிழக்கு மக்களின் போராட்டத்திற்கும் ஊறு விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எனவே இத்தகைய தலைவர்களை எதிர்காலத்தில் அம்பலப்படுத்துவதுடன் மலையக மக்களின் போராட்டங்களை விரிவு படுத்துவதற்காக முழு முயற்சிகள் இடம்பெற வேண்டும்.

4

அடைக்கப்பட வேண்டும். இவர்களுக்கே 20 வருட சிறைத்தண்டனை வழங்க வேண்டும். இவர்களுள் மூவர் விடுதலைப்புலிகளுடன் இரகசிய தொடர்புகளை வைத்திருந்தனர் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஸ தொடர்பாகவே இவர்களின் இரகசிய தொடர்பு இருந்துள்ளது. மகிந்த ராஜபக்ஸவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறச் செய்வதற்கு வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் மூலம் தேர்தல் பகிஸ்கரிப்பை மேற்கொள்வதே இவர்களின் இலக்காக இருந்தது. இதை சட்டரீதியாக பார்க்கின்ற போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரை ஏமாற்றுதலில், சூழ்ச்சியில் ஈடுபட்டமைக்காக 20 வருடங்கள் சிறையில் வைக்க முடியும். இந்த முழுச்சம்பவமும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. ஆனாலும் அது குழப்பம் விளைவிக்கப்பட்டு மறைக்கப்பட்டது. அவர்கள் நினைத்தால் என்னை நீதிமன்றத்துக்கு கொண்டு சென்று 20 வருட தண்டனையை வழங்கலாம், குற்றச்சாட்டுக்கள் நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லையானால் நான் வாகனவிபத்தின் மூலம் கொல்லப்படலாம், அல்லது வெள்ளை வான் மூலம் கடத்தப்படலாம். ஒரு பிரசை என்ற வகையில் என்னால் கூறக்கூடியது இதுவே. இந்த விடயம் தொடர்பாக தயவு செய்து நீதிமன்றத்தில் வழக்கை தொடரவும், அல்லது சுதந்திரமான ஆணைக்குழுவிசாரணை நடத்தவேண்டும். இதன்மூலம் வெகுஜனங்கள் உண்மைநிலையை அறியவாய்ப்பு ஏற்படும். உண்மையில் திட்டமிட்டு இனவன் முறைகளை தூண்டியவர்கள் யார்? பிந்துனுவெவ, மாளிகாவத்தை, கந்தப்பொலை போன்ற இடங்களில் வன்முறைகளை தூண்டியது யார்? தேவாலயங்கள் மீது எப்படி தாக்குதல்கள் நடத்தப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட யாருக்காவது 20 வருடங்கள் கடுழிய சிறைத்தண்டனை அழிக்கப்பட்டதா? யுத்தம் உச்ச நிலையில் நடைபெற்ற வேளையில் இராணுவதளபதி சரத்பொன்சேக்கா,சம்பிக்கரணவகே ஆகியோர் விடுத்த அறிக்கைகள் எப்படியானவை? இந்த நாடு சிங்கள பௌவுத்தர்களுக்குரிய நாடு, ஏனையவர்கள் வந்தேறுகுடிகள் என்றே குறிப்பிட்டனர். இத்தகைய அறிக்கை இனவன்முறையை தூண்டாதா? இத்தகைய கீழ்த்தரமான முதலாளித்துவ அரசியல் நிலைமைகளிலேயே வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இதையாராலும் புரிந்து கொள்ள முடியும்.

இங்கே சிறில்மத்தியூ, ஜே. ஆர் ஜெயவர்தன, போன்றவர்கள் பற்றி சிந்திக்க வேண்டும். இன வன்முறைகளை இவர்கள் தூண்டவில்லையா? கறுப்பு ஜுலைஎப்படி உருவானது? மிக மோசமாக யாழ் மாவட்ட சபைத்தேர்தல் அதனுடன் மேற்கொள்ளப்பட்ட காடைத்தனமான செயற்பாட்டின் மூலம் எரிக்கப்பட்ட யாழ் நூலகம் இதன்மூலம் ஒரு தேசிய இனத்தின் கலை கலாசாரபண்பாட்டு விழுமியங்களை அழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறவில்லையா? இந்த வெறுக்கத்தக்க குற்றத்தை புரிந்த யாருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். மனிதாபிமான பணிகளை புரிந்த பணியாளர்கள் 17 பேரில் படுகொலைகளை பற்றி என்ன நடந்துள்ளது. திரு கோனமலையில் 5 மாணவர்களின் கொலைகள், நடைபெறும் ஆட்கடத்தல்கள், கொலைகள் கப்பம் பெறுதல், சித்திரவதைகள், இவற்றுக்கு யார் பொறுப்பு? இதுபோன்ற மிருகத்தனமான பலாத்காரத்தை பிரயோகிப்பதனால் இனவாதம் மிருகத்தனமாக கோலோச்சுகிறது இவை மூலம் மக்களிடையே வெறுப்பையும் அவநம்பிக்கையும் வளர்க்க முடியும். இவையே பிரிவினவாதத்தை பற்றி எரியச் செய்யும் ஏதுவாகும். எனவே யார் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். தற்போது கௌரவ அமைச்சர் ரோகித்த போகொல்லாகம மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பை பாராளுமன்றத்தில் விவாதிப்பதில் சட்ட ஆட்சியை விமர்சனத்துக்கு உட்படுத்துதற்கு ஒப்பானது என கூறியுள்ளார். இவர் எங்கள் எல்லோரையும் பயமுறுத்துகிறார்.

இப்படியான பயமுறுத்தல்களுக்கு நாம் அஞ்சவேண்டியதில்லை. நாம்அவருக்கு கூறவிரும்புவது அரசியல் அமைப்பை மீண்டும் ஒருமுறை படிக்கும்படி.மக்கள் அதிகாரத்தை பெற்று அதிகாரத்தில் இருக்கும் அரசுக்கும்,ஆட்சியாளர்களுக்கும் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் மக்களுக்கு உண்மையை கூறுவதற்கும் அரசியல் அமைப்பு ரீதியான கடமைப்பாடு உண்டு. சட்டப்படி அரசு சட்ட மன்றம், நிறைவேற்று துறை நீதித்துறை மற்றும் ஏனைய அதிகார பிரிவுகள், மக்களின் நம்பிக்கைக்கும் இறையாண்மைக்கும் அமைவாக இயங்குவதுடன் மக்களின் சுதந்திரம், பாதுகாப்பு என்பனவற்றை உறுதிப்படுத்த வேண்டும். இந்த நிறுவனங்கள் முதலாளித்துவ ஜனநாயக கட்டமைப்பின் கீழ் இயங்கினாலும் கூட இவர்கள் மக்களின் பாதுகாப்புக்கும் மக்களின் இறையாண்மைக்கும் உரிய கௌரவத்தை வழங்கவேண்டும். தற்போது 300,000 தமிழர்கள் அவர்கள் தமிழர்கள் எ்ன்ற காரணத்தால் முட்கம்பி வேலிக்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இரு பகுதியினரும் மக்களை கேடயங்களாக கருதியமையால் போரின்போது மக்கள் பாரிய அளவில் பாதிப்புக்குள்ளாகினர். இராணுவ ரீதியான தீர்வை நோக்கிய செயற்பாட்டினாவேயே இத்தகைய இரக்கமற்ற விளைவுகளை மக்கள் எதிர் நோக்கினர். இராணுவ ரீதியான தீர்வு முனைப்பு பெற்றதாலேயே தனிநாடு என்ற அவா முன்னெப்போதையும் விட உறுதியாக முன்னெடுக்கப்பட்டது.

இத்தகைய நிலைமைகளால் தமிழ்மக்களின் தனிநாடு என்ற வித்துக்கள் முனபைவிட மிகமுனைப்புடன் மீண்டும் நாட்டப்பெற்றது. அதை செழிப்பாக வளர்க்கும் பொறுப்பு எதிர்கால இளைஞர் சமுதாயத்திடம் கையளிக்கப்படும். இங்கே எழும் கேள்வி என்னவென்றால் யார் ஐக்கியத்துக்காக. நேர்மைக்கா, சமத்துவத்துக்காக, நாட்டின் கௌரவத்துக்காக செயற்படப் போகின்றனர். யார் உண்மைக்காக நீதிக்காக முன் நின்று செயற்பட போகின்றனர். இங்கே எழும் கேள்வி என்னவென்றால் உண்மையான தேசப்பற்றாளர்யார் என்பதாகும். மேலும் யார் நாட்டையும் இலங்கை தேசத்தையும் மக்களையும் உண்மையில் விரும்புகின்றனர். யார் ஐக்கியத்தையும் சுதந்திரத்தையும், கௌரவத்தையும் நிர்ணயிக்கப்போகின்றனர். யார் குற்றவாளி கூண்டில் நிற்கப் போகின்றனர். நான் நினைக்கிறேன் மக்கள் ஒருநாள் கிளர்ந்து எழும்புவார்கள் அப்போது அவர்கள் காடையர்கள், கொலைகாரர்கள், அனைவருக்கும் வரலாற்றில் தகுந்த பாடதடதை புகட்டுவார்கள் தற்போது மக்களின் நீதியிடம் உருவாக்கப்புடுகிறது. இது சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் இயக்கத்தின் பிரதான பணியாகும். ஜனநாயகத்துக்கு, மனிதத்துவத்துக்கு எதிராக புரியப்பட்ட குற்றங்களுக்காக பதில் சொல்ல நிர்ப்பந்திக்க வேண்டும். இத்தகைய அரசியல் முக்கியத்துவம் திஸ்ஸநாயகத்தின் தீர்ப்பு எமக்கு வழங்கியுள்ளது.

திஸ்ஸநாயகத்தின் வழக்கை உற்றுநோக்கினால் ஒடுக்குமுறையுடன் கூடிய தொடர்ச்சியான பாரபட்சம் அரசியல் ஒடுக்குமறை, ஆயுத அடக்குமுறை, என்பனதமிழ் தேசியத்துக்கு எதிராகவேண்டும்மென்றே சிங்கள பேரினலாதத்தால் பதவியில் இருந்த மேலாதிக்க ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஒற்றை ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. தற்போது இதை மகிந்த சிந்தனை மூலம் செயற்படுத்தப்படுகிறது. யார் தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைக்காக போராடுகின்றார்களோ அவர்கள் உண்மை, நீதி, ஐக்கியம், நேர்மை, சுதந்திரம், நாட்டின் இறையாண்மை என்பவற்றுக்காக போராடுகின்றார்களோ அவர்கள் திஸ்ஸநாயகத்தின் விடுதலையையும் முன்னெடுக்க வேண்டும். அதனுடன் தமிழ் மக்களின் சுதந்திரம் மற்றும் மோசமான அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் செயற்படும் இந்த கொடிய அரசிடம் இருந்து இந்த நாட்டு மக்களை காக்கவேண்டும். யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்டோம் என்று கூறப்படுகிறது. அந்த வெற்றியை உறுதிப்படுத்த ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது மகிந்தராஜபக்ஸ தற்போது அரசன் ஆக்கப்பட்டுள்ளார் இவர் அந்நிய நாட்டவரை வெற்றி கொண்டது போல் ஆக்கப்பட்டுள்ளார். அப்படியாயின் திஸ்ஸநாயகத்தின் மீது ஏன் இந்த பழிவாங்கல் எல்லாவற்றையும் மறந்து ஏன் ஒற்றுமை படக்கூடாது பயங்கரவாத தடைச்சட்டத்தையும், அவசரகால தடைச்சட்டத்தையும் ஏன் நீடித்து வைத்திருக்க வேண்டும். அரசியல் தீர்வை முன்வைத்து தமிழ் மக்களுக்கு சட்டபூர்வமான அந்தஸ்த்தை ஏன் வழங்கக்கூடாது. இங்கே லெனின் கூறியதை ஞாபகப் படுத்த விரும்புகின்றேன் என்ன விதமான முக்கியமான செயற்பாடுகளை முதலாளித்துவ அரசு கொண்டிருந்தாலும் அந்த அரசு முதலாளித்துவத்தின் பயங்கரவாத சர்வாதிகாரத்தை பிரதிநிதித்துவ படுத்துவதாகவே அமையும். பயங்கரவாத தடைச்சட்டம் அவசரகால சட்டமும், அரசாங்கத்தின் சட்டபூர்வமான பயங்பரவாத செயற்பாடுகளுக்காக மக்களுக்கு எதிராக உள்ளன. திஸ்ஸநாயகத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கும் அவருக்கு எதிராக வழங்கப்பட்ட 20 வருட சிறைத்தண்டனையும், அரசினதும், ஆட்சியாளரினதும், ஆட்சிப் போக்கின் தன்மையை வெளிப்படுத்துகிறது. மேலும் இந்த போக்கு தமிழ் மக்களின் தாயகப் பூமியை நாசப்படுத்துவதுடன் ஒற்றை ஆட்சியுடன் கூடிய சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி தமிழர் தாயகத்தின் நிலங்கள் யாவையும் பொறுப்பு ஏற்கப்பட்டு அவற்றை பல்தேசிய கம்பனிகளுக்கு விற்பதே அவர்களின் நோக்கமாகும். இதை எதிர்ப்பவர்கள் யாவரும் ஒடுக்கப்படுபவர்கள் எனவே திஸ்ஸநாயகம் எமக்காக தியாகத்தை புரிந்துள்ளார். இந்த வரலாற்று ரீதியான செயற்பாட்டில் நாங்கள் எடுக்கும் சுதந்திரம் ஜனநாயகத்திற்கான மக்கள் இயக்கத்தில் இணையவேண்டும். திஸ்ஸநாயகத்தைபோல் ஆயிரக்கணக்கானவர்கள் சுதந்திரத்திற்காக போராடியவர்கள் உள்ளனர். அவர்களுக்காக ஒன்றிணைந்து குரல் கொடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

# தெற்கின் போராட்டங்களுடன் இணையவேண்டும்.

தென் இலங்கை ஆட்சி தளம் பலவீனம் அடைந்துள்ளது. பேரினவாத தளத்திலும் பிளவுகள் அதிகரித்துள்ளன. யுத்தத்தில் வெற்றி பெற்றல் சகல பிரச்சினைக்ளும் தீர்ந்து விடும் என்ற பேரினவாதத்தின் பிரச்சாரம் அடிபட்டு போயுள்ளது. கடந்த ஆறு மாதகாலமாக பொறுமைகாத்த தென் இலங்கை மக்கள் இன்று போராட்டங்களில் இறங்கி உள்ளனர். தொழிலாளர்கள், மாணவர்கள், ஒடுக்கப்படும் பிரிவுகள் என போராட்ட களத்தில் பல பிரிவினர் குதித்துள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தென் இலங்கை மக்களின் போராட்ட அலையுடன் ஒன்று சேரவேண்டும்.

தமிழ் தலைமைகள் முதலாளித்துவ சக்திகளுடன் பேசுவதிலும், இணைந்து செயற்படுவதிலும் காட்டும் ஆர்வம் தென் இலங்கை தொழிலாளர்வர்க்க போராட்டங்களில் காட்டுவதில்லை. இவற்றின் வெளிப்பாடாகவே எமது மக்களின் பாரிய மனித அவலம் சர்வதேச மட்டத்தில் பெரிய தாக்கத்தை செலுத்தவில்லை. இதன் பொறுப்பை சகல தமிழ் தலைமைகளும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

1953ம் ஆண்டு பொது வேலை நிறுத்தத்தின் பின்னர் தமிழ் தேசிய தலைமைகள் தென் இலங்கை தொழிலாளர் வர்க்க போராட்டத்திற்கு தமது ஆதரவை ஒருபோதும் வழங்கவில்லை. பாரம்பரிய இடதுசாரிகள், தமிழ் மக்களுக்கு செய்த துரோகத்தின் விளைவால் தமிழ் முதலாளித்துவ தலைமைகள் ஐக்கிய தேசிய கட்சியுடன் தமது தேன் நிலவை நெடுநாட்களாகவே கழித்து வந்துள்ளனர். இன்று அந்த நிலையே தொடர்கிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றி பெற முதலில் தென் இலங்கை தொழிலாள வர்க்கத்தின் ஆதரவு மிக முக்கியமானதாகும். இதன் ஊடாகவே சர்வதேச ஆதரவு தளத்துக்கு எம்மால் பயணிக்க முடியும்.

இனம், இரத்தம் என்ற கதை எல்லாம் கருணாநிதியின் துரோகத்துடன் தெளிவுக்கு வரவேண்டும். எமது மக்களின் விடுதலைக்கு எந்த வர்க்கத்தின் ஆதரவு பிரதானம் என்ற கேள்விக்கே தமிழ் மக்கள் விடைகாணவேண்டும். இன்று தென் இலங்கையில் பேரினவாதத்தின் பலத்தை முறியடிப்பதற்கு நாம் பலவழிகளிலும் செயற்பட வேண்டும். தமிழ் தலைமைகளின் கடந்த கால செயற்பாடுகள் தென் இலங்கையில் பேரினவாதம் செழிப்பாக வளர்வதறகு சில அளவில் என்றாலும் உரமாகியது. தற்போது இனவாதம் பேசிய தொழிலாள வர்க்க தளங்களில் தமிழ் மக்கள் மீதான பார்வை விழத் தொடங்கி உள்ளது. மேலும் பம்பலப்பிட்டியில் பொலிஸ்காரரின் செயற்பாட்டால் கொல்லப்பட்ட சிவக்குமாரின் மரணம் தென் இலங்கை ஊடகங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பேராதனை பல்கலைகழக மாணவி துவாரகாவின் கைதுக்கு தென் இலங்கை மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். மேலும் தமிழ் மக்களில் காணாமல் போய் உள்ளவர்கள், சிறைச்சாலைகளில் உள்ள தமிழ் [illegible] கைதிகள் தொடர்பில் போராட்டங்களும் தென் இலங்[illegible]களால் முன் எடுக்கப்பட்டுள்ளது.
எனவே எதிர்காலங்களில் தென் இலங்கை தொழிலாளர் வர்க்கம் நடத்தும் போராட்டங்களுடன் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இணைந்து செல்ல வேண்டும். இதன் மூலம் எமது போராட்டத்தின் இலக்கை எம்மால் எட்டமுடியும்.

தமிழ்மக்கள் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும் ஏகாத்திபத்தியம் தனது நலனில் அக்கறை கொண்டது, அதே போன்றுதான் முதலாளித்துவ சக்திகளும் கடந்த காலம் முழுவதும் தமிழ் மக்களின் வாழ்வில் இவர்கள் நிறையவே விளையாடி உள்ளனர். எனவே இவற்றை இனங்கன்டு எமது பயணத்தை நிதானமாக தொடரவேண்டியது எமது பொறுப்பாகும்.

வாகர்களுக்கு..!
உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி
வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

# யாழ்பாணத்தின் இன்றைய நிலைமைபற்றி பிரபல ஊடகவியலாளர் லங்காபேலி கூறுகிறார்.

யுத்தம் முடிவடைந்த நிலையிலும் யாழ் மக்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இன்னும் யாழ் மக்கள் வெளியிடங்களுக்கு செல்ல முடியாத நிலையிலேயே உள்ளனர். யாழ் மாவட்டத்திற்கு வெளியே மட்டுமல்ல, யாழ் பாணத்துக்குள்ளேயும் செல்ல முடியாத நிலையிலேயே அவர்கள் உள்ளனர். தமது உறவுகளின் மரண வீட்டுக்கு போவதாயினும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.உணவு பொருட்களின் விலை அதிகரித்த நிலையே காணப்படுகிறது. வீதிகள் யாவும் 4-5 மணியுடன் வெறிச்சோடிக் கிடக்கிறது.

ஜனாதிபதி தேர்தலைப் பற்றி எதுவித அக்கறையும் யாழ் மக்களிடம் காணப்படவில்லை. பேரினவாதி ஒன்று பேரினவாதி இரண்டு எனறே மகிந்தவையும், சரத் பொன்சேக்காவையும் அவர்கள் எண்ணுகின்றனர். யாழ்பாணத்தில் இருந்து வெளியே செல்வதாயின் விமானத்தின் மூலம் சென்றால், விமானத்தின் மூலமே திரும்ப வரவேண்டும். கடற்பயணம் என்றாலும் தரைப்பயணம் என்றாலும் அதேநிலைதான். விமான பயணத்திற்கு 40,000 ரூபா அளவிலும், தரை வழிபயணத்திற்கு 6000ரூபா அளவிலும் செலவாகிறது.

ஊடக சுதந்திரம் அறவே இல்லாத நிலையே காணப்படுகிறது. ஏதாவது செய்திகளை பத்திரிகையில் பிரசுரித்தால், அந்தச் செய்தியின் மூலங்களை விசாரித்து பாதுகாப்பு பிரிவினர் தொல்லை கொடுக்கின்றதாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் மக்களின் துயரநிலை உச்சநிலையில் உள்ளது வலிகாமம் வடக்கில் 45 கிராம சேவகர் பிரிவில் 29 பிரிவு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளன. இவர்கள் மீள குடியேற அனுமதிக்குமாறு கோரி 2006ல் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் 600 குடும்பங்களை மீளக் குடியேற்றுமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அதை நடைமுறைப் படுத்தவில்லை. வலிகாமம் வடக்கில் 46 பாடசாலைகள் இருந்துள்ளது. அவற்றில் 21 பாடசாலைகள் இயங்குகின்றன. மிகுதி பாடசாலைகள் இயங்காதநிலையில் உள்ளது.

தற்போது தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ்வண்டியில் பயணம் செய்வது மிகவும் பிரச்சினையான ஒன்றாகும். எல்லா பஸ்வண்டிகளும் ஒன்றாகவே பயணிக்கின்றன. ஒரு பஸ்வண்டிக்கு ஏதும் கோழாறு என்றால் எல்லா பஸ்வண்டிகளும் நின்று விடுகின்றன. திருத்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னரே பயணிக்கின்றன.இன்று யாழ் மக்களுக்கு போக்கு வரத்து பிரச்சினையே அதிக பிரச்சினையாக உள்ளது. இப்பிரச்சினை கடந்த 20 வருடகாலங்களாக இம்மக்கள் எதிர் நோக்குகின்றனர்.

இராணுவத்தின் பரிசோதனை நிலையங்கள் அதிகரித்த நிலையே காணப்படுகின்றன. மக்கள் இந்த பரிசோதனை நிலையங்களை சந்தித்தே செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் அவர்களுக்கு பல அசௌகரியங்கள் ஏற்படுகின்றனவடக்கு வசந்தம் என்ற போர்வையில் அரச நிர்வாக செயற்பாடுக்காக விசேட அணி ஒன்று உருவாக்கப்பட்டது. இதில் 18 அதிகாரிகள் உள்ளனர் இவர்களில் இரண்டுபேர் மட்டுமே தமிழர்களாக உள்ளனர். அவர்களும் கொழும்பை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.


இடம் பெயர்ந்த மக்கள் தற்போது யாழ்ப்பாணத்துக்கு வன்னியில் இருந்து வரத் தொடங்கி உள்ளனர். வேலணை பகுதியில் 300 போ வரை வந்துள்ளனர். இவர்களில் ஒருவர் திருமண வைபவத்திற்காக சென்றிருந்தார். யுத்தம் மூண்டதால் அவரால் திரும்ப முடியவில்லை.யுத்தத்தில் அவருக்கு ஒரு கை இல்லாது போய் உள்ளது. அரசாங்கம் ரூபா 5000, வழங்கியுள்ளது. மிகுதி 20000ரூபா வழங்குவதாக கூறியுள்ளது. இந்த மக்களுக்கு குடியிருப்பு வசதிகள் ஏதும் மேற்கொள்ளப் படவில்லை உறவினர்கள் வீடுகளிலும், மர நிழல்களிலும் தங்கி வாழ்கின்றனர்.பொதுவாகவே யாழ் மக்கள் ஒரு திறந்த வெளி சிறையில் வாழ்வதை போன்ற மனநிலையிலேயே உள்ளனர். "வடக்கில் வசந்தம்" என்று கூறப்படுகிறது உண்மையில் வடக்கில் சோகமே அரசாங்கத்தால் மேடை யேற்றப்படுகிறது.





மொகமட் பைசால்

ஐக்கிய தேசிய கட்சி உள்ளிட்ட எதிர்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளராக சரத் பொன்சேகா களத்தில் இறங்க உள்ளார் யார் இந்த சரத் பொன்சேகா. இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு சொந்தமானதாகும் எனவும் ஏனையவர்கள் வந்தேறு குடிமக்கள் என்றும் யுத்தம் உச்ச நிலையில் இருக்கும் போது கூறியிருந்தார். தமிழ்மக்களின் தேசிய பிரச்சினைக்கு 13வது திருத்தமும் அதற்கு மேலான எந்த அதிகாரங்களும் கொடுக்க முனைந்தால் அதற்கு எதிராக இறுதிவரை போராடுவதாக கூறியிருந்தார்.இவரின் கடந்தகால செயற்பாடுகள் சிங்கள பேரின வாதிகளின் நிகழ்சி நிரலுக்கு ஏதுவாகவே அமைந்திருந்தது. இவர் போர்காலங்களில் புரிந்த குற்றங்களுக்காகவும் மனித உரிமை மீறலுக்காகவும் சர்வதேச நீதி மன்றத்தில் நிறுத்தக்கூடிய ஏதநிலை உள்ளது



ஆகவே இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக இவரை நிறுத்தப்பட ஐக்கிய தேசியக்கட்சி, முஸ்லீம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஏன் முன்வந்துள்ளன தென் இலங்கையில் சிங்கள, பௌத்த பேரினவாதிகள் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக செயல்பட்டு கொண்டிருக்கும் வேளையில் இந்த கட்சிகள் ஏன பௌத்த பேரினவாதிகளிடம் மண்டியிட வேண்டும். வரலாற்றில் தமிழ், முஸ்லீம் மக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கே வாக்களித்து வந்தனர். இப்போது இம்மக்கள் மாற்று தெரிவு ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

நமது தலைவர்கள் பதவி ஆசைக்காகவும், சுகபோக ஆசைக்காகவும் எம்முடன் இணைந்திருப்பது போல் வேடம் இடுகின்றனர். உண்மையில் இவர்கள் மாறிமாறி வரும் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட விரும்புகின்றனர். இவர்கள் எமது மக்களின் தனித்துவத்தை காப்பதற்காக ஒருபோதும் முன்வருவதில்லை. கடந்த நான்கு ஆண்டுகளில் முஸ்லீம் மக்கள் மீது பல வன்முறைகள் கட்டவிழ்த்து விட்ட போதும் அதற்கு எதிராக முஸ்லீம் தலைவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் ஆட்சியை காப்பதிலேயே கருத்தாக இருந்தனர்.

இவர்கள் ஒருபோதும் முஸ்லீம் மக்களின் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு முன்வருவதில்லை. இதேநிலைதான் ஐக்கிய தேசிய கட்சியிலும் உள்ளது. இந்த சூழ்நிலையில் பேரினவாதிகளுடன் இணைந்து செயல்படும் சரத் பொன்சேகாவை முஸ்லீம், தமிழ் மக்கள் ஒருபோதும் ஆதரிக்க முடியாது. இவர் ஆட்சிக்கு வந்தால் மியன்மார் அரசாங்கத்தை ஒத்த ஆட்சியையே இங்கும் காணவேண்டி வரும். எனவே அரசியலில் சம்பந்தப்படாதவர் என்று தன்னை அடையாளப்படுத்தும் இராணுவ அதிகாரியை எக்கட்டத்திலும் முஸ்லீம், தமிழ் மக்கள் ஆதரிக்க முடியாது. இரண்டு இனவாத அணிகளிலும் இருந்து விலகி சிறுபான்மை இனத்திற்காக குரல் கொடுக்கக் கூடிய மூன்றாவது அணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபடுவதுடன் அந்த அணி மூலம் ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு வேட்பாளரை நிறுத்த நாம் தயாராக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org